இனம்
இனம் இனத்தைச் சேரும்
ISSN : 2455 - 0531
Mail Id: inameditor@gmail.com
editor@inamtamil.com
பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
UAN.TN03D0061112
International E-Journal of Tamil Studies
இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!
மலர்:6 இதழ்:23 ஆகஸ்ட் 2020 Vol.6 Issue:23 August 2020

ஆறாம் ஆண்டில் இனம்


ISSN/EISSN -/2455 - 0531
Inam: International E_Journal of Tamil Studies
CiteFactor
CERTIFICATE
Of IMPACT FACTOR
1.10
SCORE | 1.10
ISSUED BY | Citefactor.org
CALCULATED FOR YEAR 2019-20
Electronic Object Identifier (EOI)
www.citefactor.org/check/
Directory Indexing of International Research Journal
Date Of Issue
April 22, 2020

த.மேகராசா வெங்கடேசன் பிரகாஷ் சீ.சந்திரசேகரம்

பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
முனைவர் த.சத்தியராஜ்

Inam ISSN : 2455 - 0531
UAN.TN03D0061112

இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
International E-Journal of Tamil Studies

பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
தமிழ் உதவிப்பேராசிரியர்
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி - 17.

முனைவர் த.சத்தியராஜ்
தமிழ் உதவிப்பேராசிரியர்
ஸ்ரீகிருஷ்ணா ஆதித்யா கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 42.

ஆலோசனைக் குழு

முனைவர் செ.வை.சண்முகம் (சிதம்பரம்)
முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ந.வேலுச்சாமி (சேலம்)
திரு சு.ஸ்ரீகந்தராசா (ஆஸ்திரேலியா)

ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் இரா.குணசீலன் (திருச்செங்கோடு)
முனைவர் ந.இராஜேந்திரன் (கோயம்புத்தூர்)
முனைவர் இரா.இராஜா (திருச்சி)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (தஞ்சாவூர்)

இதழாக்கமும் வெளியீடும்
முனைவர் த.சத்தியராஜ்
கோயமுத்தூர்
09600370671
inameditor@gmail.com
www.inamtamil.com

ஆகஸ்ட் 2020 மலர் : 6 இதழ் : 23
August 2020 Volume VI Issue 23

உள்ளே ...

ஜெர்மனிய புகலிடத் தமிழ் இலக்கியத்தில் புலம்பெயர் தமிழ்ச்சமூகம்
Tamil Diaspora Community in German Tamil Diaspora Literature

த.மேகராசா/ T.Megarajah | 4

தமிழியல் ஆய்வு முன்னோடி நிறுவனம்: பாண்டிச்சேரி பிரஞ்சு ஆய்வு நிறுவனம்
Pioneer Institute in Tamil studies: Institute Français de Pondichéry

முனை.வெங்கடேசன் பிரகாஷ்/Dr.Venkatesan Prakash | 19

இலங்கை முஸ்லிம் கிராமியப் பெண்களின் துன்பியல் 'கவி'கள்: சமூக, உளவியல் நோக்கு
Tragic 'Kavi' of Sri Lankan Muslim Village Womens: Social and Psychological view

கலாநிதி சி. சந்திரசேகரம்/ Dr.S.Santhirasegaram | 31

...

Chief Editors

Dr.M.Muneesmoorthy
Assistant Professor in Tamil
Bishop Huber College, Trichy - 17.

Dr.T.Sathiyaraj
Assistant Professor in Tamil
Sri Krishna Adithya College of Arts and Science, Coimbatore - 42.

ADVISORY TEAM

Dr.S.V.Shanmugam (Chidambaram)
Dr.S.Rajaram (Nagarkovil)
Dr.Silambu.N.Selvarasu (Pondichery)
Dr.N.Veluchamy (Selam)
Sri S.SriKantharasa (Astralia)

Editorial Team

Dr.A.Mani (Pondichery)
manikurunthogai@gmail.com

Dr.G.Balaji (Coimbatore)
balajiand@gmail.com

Dr.R.Gunaseelan (Coimbatore)
gunathamizh@gmail.com

Dr.N.Rajendran (Coimbatore)
ilayavantamil@gmail.com

Dr.R.Raja (Trichy)
sengolan84@gmail.com

Dr.B.Sivamaruthi (Thailand)
sivasgene@gmail.com

Dr.S.Muthuselvam (Madurai)
muthuselvam8122@gmail.com

Dr.S.Vijaya Rajeshwari (Thanjavur)
76viji@gmail.com

Thiru.F.H.Ahamed Shibly (Srilanka)
shiblyfh@seu.ac.lk

Writing Instructions

1. இனம் பதிப்புக்குழுவினரால் தெரிவுசெய்யப் பெற்ற கட்டுரைகள் மட்டுமே இடம்பெறும்.
2. ஆய்வுக்கட்டுரை ஆய்வுநெறியைப் பின்பற்றியதாக அமைதல் வேண்டும்.
3. பக்க வரையறை இல்லை.
4. ஒருங்குறி எழுத்துருவில் அமைதல் வேண்டும்.
5. தமிழிலும் ஆங்கிலத்திலும் தலைப்பு அமைதல் வேண்டும்.
6. தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆய்வுச் சுருக்கம் அமைதல் வேண்டும்.
7. குறிச்சொற்கள் அமைதல் வேண்டும்.
8. துணைநூற் பட்டியல் APA 6th Edition format-இல் அமைதல் வேண்டும்.
9. மதிப்பீட்டாளரின் கருத்தை உரிய திருத்தம் செய்து உரிய நாட்களுக்குள் அனுப்புதல் வேண்டும்.
10. போலியான ஆய்வு எனக் கண்டறியப்பெற்றால் இணையப் பக்கத்திலிருந்து உடனே நீக்கம் பெறும்.

மதிப்பிடப்பெற்றது

ஜெர்மனிய புகலிடத் தமிழ் இலக்கியத்தில் புலம்பெயர் தமிழ்ச்சமூகம்

Tamil Diaspora Community in German Tamil Diaspora Literature

த.மேகராசா/ T.Megarajah[1]

Abstract

This article based on the literature of German diaspora writers and researches about life challenges of Tamil community who migrated from Sri Lanka and lives in German. It researches in analytical, sociological, and descriptive approaches.

In this respect, life issues related to Refugee life, career, culture, education, language and structure of family which were faced by Elam Tamils who tried to live in new environment have been presented. This research insists the situations of elderly people of Tamil diaspora worry about younger generation's behaviour which is against to Tamil culture in present situation and impossibility of Tamils' intention which is establishing the identity of Tamils in future. This article strongly says that trend of diaspora literature and their subjects would change in future and Tamil diaspora community which lives without identity is in danger of sinking into the culture of refuge countries.

Keywords: Tamil Diaspora, Community, Culture**,** identity

அறிமுகம்

காலனித்துவ காலத்திலும் அதற்குப் பின்னரும் இலங்கையிலிருந்து தமிழர்கள் வெவ்வேறு நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்றிருப்பினும் இலங்கையில் கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக நிலவிய இனமுரண்பாட்டுச் சூழலே பெருந்தொகையான தமிழர்கள் ஜெர்மனி, இங்கிலாந்து, பிரான்ஸ், சுவிஸ், நார்வே, இத்தாலி, டென்மார்க், நெதர்லாந்து, கனடா, ஆஸ்திரேலியா முதலான பல்வேறு நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து செல்லக் காரணமாக அமைந்தது. குறிப்பாக எண்பதுகளுக்குப் பின்னரான இலங்கையின் இனமுரண்பாட்டுச் சூழல் அரசியல் தஞ்சம் சார்ந்த புலப்பெயர்வுக்கு வித்திட்டது. இக்காலப்பகுதியில் மேலோங்கிக் காணப்பட்ட இராணுவ கெடுபிடிகள், அரச படைகளுக்கும் விடுதலை இயக்கங்களுக்கும் இடையிலான சண்டைகள், இடம்பெயர்வுகள், இயக்க முரண்பாடுகள், இவை காரணமாக நடைபெற்ற படுகொலைகள், கடத்தல்கள் வாழ்தலுக்கான சாத்தியப்பாட்டை இல்லாதொழித்தமையால் விரும்பியோ விரும்பாமலோ கூடுதலான தமிழர்கள் புலம்பெயர்ந்து செல்ல வேண்டியேற்பட்டது. மொழி, நிறம், கலாசாரம், காலநிலை, சட்டம், தொழில்முறை என்பவற்றால் மாறுபட்ட புதியதொரு சூழலில் வாழ முற்பட்டோரில் குறிப்பிட்ட சிலர், தமது வாழ்வியல் அனுபவங்களையும், தாயக உணர்வுகளையும்

---

[1] The author is a Ph.D. Scholar at the Department of Language, Arts & Culture, University of Eastern, Sri Lanka. megarajaht@yahoo.com

இலக்கியங்களினூடாக வெளிப்படுத்தினர். இத்தகைய இலக்கியங்கள் புகலிடத் தமிழ் இலக்கியம், புலம்பெயர் இலக்கியம், புலச்சிதறல் இலக்கியம் என்று வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றன. இவை ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் புதியதொரு அனுபவத்தினையும் அகல நோக்கினையும் ஏற்படுத்தியதுடன் ஈழத்துத் தமிழ் இலக்கியங்களை மூன்றாம் உலக இலக்கியங்களுடன் ஒப்பிட்டு நோக்குவதற்குரிய வாய்ப்பினையும் வெளிப்படுத்தின. மேலும் தாயகச் சூழலில் மறுதலிக்கப்பட்ட எழுத்துச் சுதந்திரத்தின் எதிரொலியாகவும் இவ்விலக்கியங்கள் அமைந்தன. புகலிட இலக்கியங்கள் புலம்பெயர் சமூகத்தை அறிந்துகொள்வதற்குரிய முக்கிய ஆவணங்களாகவும் உள்ளன.

ஆய்வு நோக்கங்கள்

இக்கட்டுரை ஜெர்மனிய தமிழ்ச்சமூகத்தின் வாழ்வியலை எடுத்துரைப்பதை முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது. குறிப்பாக அகதி வாழ்வுக்கு முகங்கொடுத்தல் முதற்கொண்டு பண்பாட்டுச் சிக்கலை எதிர்கொண்டிருக்கும் நிலை வரையான வாழ்வியலை எடுத்துரைக்க முனைகிறது.

அத்துடன் எதிர்காலத்தில் தமிழர் பண்பாட்டு அடையாளங்களையும் வேர்களையும் மெல்ல மெல்ல இழந்து விடக்கூடிய அபாயத்தையும் சுட்டிக்காட்ட முனைகிறது.

தவிர ஜெர்மனிய தமிழ் எழுத்தாளர்களின் ஆக்கங்கள் தமிழ்ச்சமூகத்தை எவ்விதம் பிரதிபலித்து எழுதப்பட்டுள்ளன என்பதை எடுத்துரைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஆய்வு முறையியல்

ஜெர்மனிய புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் வாழ்வியல் நிலை எத்தகையது? இன்று தமிழ்ச்சமூகம் முகங்கொடுக்கும் முக்கிய பிரச்சினை என்ன? ஆகிய முதன்மை வினாக்களுடன் ஜெர்மனியில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் எழுத்தாளர்களின் 1987 தொடக்கம் 2017 வரையான காலப்பகுதியில் வெளிவந்த ஆக்கங்களை முதனிலைத் தரவுகளாகவும் அவ்வாக்கங்கள் தொடர்பான கட்டுரைகள், நேர்காணல்கள் முதலானவற்றைத் துணைநிலைத் தரவுகளாகவும் கொண்டு அவற்றைப் பரந்த வாசிப்புக்கு உட்படுத்தி அவற்றிலிருந்து குறிப்புகள் பெறப்பட்டு பின்னர் அவை பகுப்பாய்வு செய்யப்பட்டு முன்வைக்கப் பட்டுள்ளன.

ஜெர்மனியில் இலங்கைத்தமிழர்

17, 18ஆம் நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே ஜெர்மனி நீண்டதொரு குடியேற்ற வரலாற்றைக் கொண்ட நாடாக விளங்குகின்றது. 1970களில் விருந்தின தொழிலாளர்களும் (Guest – workers) 80களில் அவர்களின் குடும்பங்களும் ஜெர்மனியில் குடியேறினார்கள் (Michaelar.Told, 2014:52). இதே காலப்பகுதியில் இலங்கையிலிருந்து தமிழர்கள் அரசியல் தஞ்சம் கோரி ஜெர்மனிக்குள்

நுழைந்தார்கள். எண்பதுகள் காலப்பகுதியில் புலம்பெயர் தமிழர்களை வரவேற்ற ஒரு நுழைவாயிலாக ஜெர்மனியே காணப்பட்டது. இக்காலப் பகுதியிலிருந்து தொடர்ந்து வந்த மூன்று ஆண்டுகளில் ஜெர்மனிக்குச் செல்லும் ஆண்களின் எண்ணிக்கை அதிகரித்தது. 1990களில் இடம்பெற்ற கணக்கெடுப்பு, ஜெர்மனியில் 32702 இலங்கையர்கள் வசித்ததாக உறுதிப்படுத்தியது. 1998இல் 40000–45000 தமிழர்கள் வாழ்ந்தனர். ஜெர்மனிக்கு வருகை தந்த தமிழர்களில் ஒரு பகுதியினர் அங்கேயே அகதி அந்தஸ்தைப் பெற்றுக்கொண்டு வாழ, ஒரு பகுதியினர் ஜெர்மனியினூடாக நுழைந்து பல்வேறு நாடுகளுக்கும் சென்றார்கள். புலம்பெயர் நாடுகளில் 600,000 தொடக்கம் 800,000 வரையான தமிழர்கள் வாழ்வதாகக் கூறப்படுகின்றது (Thusinta Somalingam, 2015:177). தற்போது ஜெர்மனியில் 60000 – 65000 தமிழர்கள் வாழ்வதாக அந்நாட்டுத் தினசரிப் பத்திரிகைச் செய்தி மூலம் அறிய முடிகின்றது.

ஜெர்மனி பல்கலாசார நடைமுறைகளுக்கு இடமளித்துள்ளது. வெவ்வேறு நாடுகளின் புலம்பெயர் சமூகத்தினர் தத்தமக்குரிய கலாசார நிகழ்வுகளையும் வழிபாட்டு மரபுகளையும் பின்பற்றுகின்றனர். இதற்கு, புலம்பெயர் தமிழ்ச்சமூகத்தின் முதலாவது தலைமுறையைச் சேர்ந்த நாயன் என்பவரது பின்வரும் கூற்று எடுத்துக்காட்டத்தக்கதாகும்:

> "நான் ஒரு தமிழ். அத்துடன் இந்து. நான் ஒவ்வொரு நாளும் பிரார்த்தனை செய்கிறேன். இங்கே ஒரு இந்து கோயில் உள்ளது" (Michaelar. Told, 2014:145).

ஜெர்மனியில் தமிழ்ச் சமூகத்தின் நிலை

ஜெர்மனியில் வாழும் தமிழ்ச் சமூகம் அகதிவாழ்வு, தொழில் நிலை, பண்பாட்டுச் சிக்கல், கல்வி நிலை, குடும்பச்சிக்கல்கள், ஒடுக்குதல்கள் முதலானவை சார்ந்து எதிர்நோக்கும் சவால்கள் ஆராயப்படவேண்டியனவாகும். அவ்விதத்திலேயே இக்கட்டுரையும் அமைகின்றது

அகதி வாழ்வு

புலம்பெயர் இலக்கியத்தின் பண்புக்கூறுகளுள் ஒன்றாக அகதி வாழ்வு பற்றிய அனுபவங்கள் அமைந்துள்ளன. தமிழர்கள் புலம்பெயர்ந்து வெவ்வேறு நாடுகளுக்கு அரசியல் தஞ்சமடைந்தபோது அந்நாடுகள் தஞ்சடைந்த மக்களை வழிநடத்துவதில் வெவ்வேறு நடைமுறைகளைக் கையாண்டன. இதனால் புலம்பெயர்ந்தோர் அகதி அந்தஸ்தைப் பெறுவதிலும் அந்நாடுகளின் குடியுரிமையைப் பெறுவதிலும் பல்வேறு துயரங்களை எதிர்நோக்கினர். இத்தன்மை புலம்பெயர் தமிழர்கள் எதிர்நோக்கிய ஒரு பொதுப்பிரச்சினையாக அமைந்தபோதிலும் சில நாடுகளில் அரசியல் தஞ்சக்கோரிக்கை பெறும்பொருட்டுத் தமிழர்கள் முகாம்களுள் முடங்கிக் கிடந்து அனுபவித்த துயரங்கள் மிகக் கடினமானவையாகும். குறிப்பாக ஜெர்மனியில் அதிகமான அகதிகள் தஞ்சமடைந்தமையினால் ஜெர்மனிய அரசு நெருக்கடியான நிலையைச் சந்திக்க நேர்ந்தது. அரசியல் தஞ்சம் வழங்குவதில் தாமதங்கள் ஏற்பட்டன. இதனால் அகதியாகத் தங்கவைக்கப்பட்ட தமிழர்களின் தஞ்சக்கோரிக்கை

ஏற்றுக்கொள்ளப்படாமையினால் முகாங்களிலே அவர்கள் முடங்கிக் கிடக்க வேண்டியிருந்தது. அத்துடன் தங்க வைக்கப்பட்ட இடத்தை விட்டு வெளியே உறவினர்களின் வீடுகளுக்கோ அல்லது வேறு இடங்களுக்கோ செல்லமுடியாத நிலையும் காணப்பட்டது. இதனை புலம்பெயர் இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. பார்த்திபனின் 'கனவை மிதித்தவன்' நாவலின் பின்வரும் பகுதி இதற்கு எடுத்துக்காட்டாகத் தரப்படுகின்றது:

> "எனக்கு மட்டும் பிடிப்பே?
>
> சும்மா கிடந்து சாப்பிடுறதும் படுக்கிறதும் சீ எண்டு போச்சு. அதுதான் வெளியால போக ட்றை பண்ணிக்கொண்டிருக்கிறன். பாலகுமார் சொன்னான்.
>
> எனக்கு அது கூட வெறுத்துப் போச்சு. எங்க போனாலும் நிலமை ஒண்டுதானே.
>
> இஞ்ச எல்லோ வேலை செய்யாதை. அங்கால போகாதை. இங்கால போகாதை எண்டு அடைச்சு வைச்சிருக்கிறாங்கள். மற்ற நாடுகளில் இப்பிடி இல்லத்தானே? சோசல் காசு குடுக்காம போய் வேலையச் செய்யுங்கோ எண்டு கலைச்சு விடுறானாம்" (பார்த்திபன், 1988:67)

மேலுள்ள கூற்று வேறு சில நாட்டு அரசாங்கங்கள் அகதிகளை வெளியில் நடமாடவும் வேலை செய்யவும் அனுமதித்தபோதும் ஜெர்மனி அரசு அத்தகைய சலுகைகளை வழங்க முடியாதிருந்தமையைப் புலப்படுத்துகின்றது.

வசதிகளற்ற – பாதுகாப்பற்ற முகாங்களில் குறிப்பாக நூறு பேருக்கு ஒரு மலசல கூடம், ஒரு சமையலறை, வெவ்வேறு நாட்டவர்களுடன் ஓர் அறையில் வாழ்தல் என்ற நிலை காணப்பட்டதுடன் படிப்பதற்கும் தொழில் புரிவதற்கும் விருப்பமிருந்தும் ஜெர்மனி போன்ற நாடுகள் அனுமதி வழங்கப்படவில்லை. உமாவின் 'மரியானா' என்ற சிறுகதை ஜெர்மனிய அரசு அகதிகளை நடத்திய பொறுப்பற்ற விதத்தை எடுத்துக் கூறுகின்றது.

ஜெர்மனி போன்ற நாடுகள் அகதிகள் தொடர்பில் மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக வேறு நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து செல்வதில் தமிழர்கள் ஆர்வம் காட்டினர். குறிப்பாக அதிகமான தமிழர்கள் ஜெர்மனியினூடாகவே அரசியல் தஞ்சம் தேடிச் சென்ற போதிலும் அவ்வாறு சென்ற அனைவரும் அங்கு நிலைத்திருக்கவில்லை. கனடா, பிரித்தானியா போன்ற நாடுகளுக்குச் சென்றுவிட்டனர். இவ்வாறு வேறு நாடுகளுக்குச் செல்வதிலும் பல்வேறு சவால்களை எதிர்நோக்கினர். பார்த்திபனின் 'தெரிய வராதது' சிறுகதை ஜெர்மனியில் தஞ்சமடைந்திருந்த பாலகிருஷ்ணன் ஜெர்மனியில் நிருவாகக் கெடுபிடிகள், போதிய சம்பளம் இன்மை காரணமாகக் கனடா போக ஆசைப்பட்டு பலமுறை முயன்று கைதாகி பின்னும் ஆசை தீராது, அமெரிக்க கறுப்பினத்தைச் சேர்ந்த கிறிஸ்டோபர் பிலிக் என்பவரின் அடையாளத்துடன் பயணமாகி சென்ற விமானம் வெடித்துச் சிதறியமையால் பரிதாபகரமாக இறந்துபோன செய்தியைத்

தருகிறது. இக்கதையில் வரும் பின்வரும் பகுதியும் அகதிகள் நடத்தப்பட்ட விதத்தினையே எடுத்துக் கூறுகின்றது.

"விருப்பந்தான் காசனுப்ப வேணுமென்டு. எனக்கு மட்டும் பாசமில்லையே? நிலைமையள் விளங்காதே? எனக்கு விளங்கி என்ன? ஜேமன் அரசாங்கம் எல்லோ எல்லாத்தையும் கையுக்க வைச்சிருக்கு. நீ அரசியல் தஞ்சம் கோரிய பம்மாத்து அகதி. எப்படியோ இங்கு வந்து விட்டாய். உன்னை இங்கு கொல்லப் போவதில்லை. வெடிக்காது. ஒரு மூலையில் இருந்து விட்டு நாங்கள் பிடித்து அனுப்பும் போது நாட்டுக்குப் போய்ச்சேர் என்றது ஜேமன் அரசு. இதற்குப் பெயர் அரசியல் தஞ்சமாம். இந்த நாட்டில் வாழ எங்களுக்கு உரிமை இருக்குது. அரசுகள் மூண்டாம் உலக நாடுகளைச் சுறண்டிச் சம்பாதிச்சு தங்களை வளத்துக்கொண்டிருக்குதுகள். தாங்கள் சுறண்டினதையே எங்களுக்குப் பிச்சையாய் போடுறதுக்காண்டி வேலை செய்ய விடாமல் ஒண்டுக்கும் ஏலாதவர்களாய் எங்களை ஆக்கிக் கொண்டிருக்குதுகள்" (பார்த்திபன், 2017:121–122)

பொ.கருணாகரமூர்த்தியின் 'வாழ்வு வசப்படும்'(1996) நாவல் மேற்கு ஜெர்மனியில் அகதி முகாமாகவுள்ள டியூலிப்ஸ் ஹோட்டலிலுள்ள மூன்றாம் தளத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகளான முத்துராசா, அத்வைகன், திலகன், நகுலன் ஆகியோரது அன்றாட வாழ்வைச் சித்திரிக்கின்றது. இந்நாவலாசிரியரின் மற்றொரு நாவலாகிய 'ஒரு அகதி உருவாகும் நேரம்'(1996) நாவல் அதன் தலைப்புக்கு ஏற்றவாறே இலங்கைத் தமிழர் ஒருவர் அகதியாக நுழைவது தொடக்கம் அரசியற் தஞ்சத்தைப் பெற்றுக்கொள்வதற்கு சாதகப்பாடுள்ள நாட்டில் சேர்வது வரையில் எதிர்கொள்கின்ற பல்வேறு இடர்ப்பாடுகளையும் பிரச்சினைகளையும் எடுத்துக் கூறுகின்றது.

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து சென்றோர் தாம் செல்லவேண்டிய நாட்டிற்குச் சென்றனராயினும் எங்குச் செல்வதென்று தெரியாமல் அல்லது செல்லவேண்டிய இடம் தெரிந்தாலும் அவ்விடத்திற்கு எவ்வாறு போய்ச் சேர்வதென்று தெரியாது அலைந்து துன்பப்பட்டனர். கருணாகரமூர்த்தி 'பெர்லின் நினைவுகள்' என்ற நூலில் தான் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து ஜெர்மனிக்குச் சென்று அலைந்து துன்பப்பட்டமையை எடுத்துக் கூறியுள்ளார்.

எண்பதுகளிலிருந்து அரசியல் தஞ்சக் கோரிக்கையாளர்களின் வருகை அதிகரிக்கத் தொடங்கியதும் ஜெர்மன் அரசு அகதிகள் தொடர்பில் கவனம் செலுத்தத் தொடங்கியது. காவல்துறையினர் அகதிகளைக் கண்காணிக்கத் தொடங்கினர். அச்சூழலில் ஜெர்மனியை வந்தடைந்த தமிழர்கள் காவல்துறையினரிடம் அகப்படாமல் வெவ்வேறு முறைகளில் இடம்விட்டு இடம்மாறி உழன்றமையைக் கருணாகரமூர்த்தி குறிப்பிட்டுள்ளார்: அதன் ஒரு பகுதி எடுத்துக்காட்டாகத் தரப்படுகின்றது:

"வேறு ஆட்களின் பயணக் கடவுச்சீட்டுக்களில் தம் தலைகளை மாற்றிக்கொண்டு மேற்கு ஜெர்மனியுள் சுளுவாக நுழைந்தார்கள். தலைகளை மாற்றாமலும் தோற்ற ஒற்றுமையை வைத்துக்கொண்டும்

ஒருவரின் கடவுப் புத்தகத்தில் இன்னொருவர் செல்லும் மாயங்களும் நிகழ்ந்தன. சிலர் மேற்கு பெர்லினில் தொடருந்தில் பகுப்பறைகளுக்குள் ஏறியதும் ஏனைய பயணிகள் வரமுன்பதாக இருக்கையின் அடியில் புகுந்து படுத்துக்கொண்டு மேற்கு ஜெர்மனியுள் சுளுவாக நுழைந்தனர். சுண்ணாகச் சந்தையில் மரக்கறி வியாபாரம் பண்ணிக்கொண்டிருந்த விடலைப் பையன் ஒருவன் இவ்வாறு இருக்கையின் கீழாகப் படுத்து மேற்கு பெர்லினிலிருந்து மேற்கு ஜெர்மனிக்குப் போனான். மேற்கு ஜெர்மனியில் அவன் அடைந்த நகரமும், விஸா நடைமுறைகளும் அவனுக்குப் பிடிக்கவில்லை, அதே இருக்கைக்கீழான முறையில் படுத்துப் பாரீஸுக்குப் போனான். பாரீஸும் அவனுக்குப் பிடிக்காமல்போகவே திரும்பவும் ஜெர்மனியின் வேறொரு நகரத்துக்கு வந்தான்" (1996:66)

மேலுள்ள பகுதி தமிழர்கள் எவ்வாறு ஜெர்மனிக்குள் நுழைந்தார்கள் என்பதையும் பின்னர் ஜெர்மனிக்குள்ளேயே பொருத்தமான இடம்தேடி எவ்வாறெல்லாம் அலைந்தார்கள் என்பதையும் புலப்படுத்துகின்றது.

தொழில் நிலை

தொழிலுக்காக எதிர்பார்க்கப்படும் கல்வித்தரம், தொழிலுக்கான அனுபவங்கள் என்பவை நாட்டுக்கு நாடு வேறுபட்ட தகுதிப்பாடுகளைக் கொண்டவையாகும். தாம் அரசியல் தஞ்சமடைந்த புகலிடநாடுகளில், தொழிலைப் பெற்றுக்கொள்ளக்கூடிய தகுதிப்பாடு அற்றவர்களாகவே பெரும்பாலான ஈழத்தமிழர்கள் காணப்பட்டனர். ஈழத்தில் உயர்கல்வி சார் சான்றிதழ்களைப் பெற்றிருந்தவர்களாலும்கூட புகலிட நாட்டில் அத்தகைய கல்வி நிலைக்கேற்ற தொழிலைப் பெற முடியாதிருந்தது. இதன்காரணமாகத் தொழில் தேடியலைதல், தொழிலில் உறுதிப்பாடின்மை, பொருத்தமில்லாத தொழிலாயினும் செய்யவேண்டியிருந்தமை, தொழிலின்றித் தனிமையில் வாடுதல் எனப் பல சவால்களை எதிர்நோக்கினர். புகலிட நாடுகளில் அந்நாட்டவர்கள் செய்ய விருப்பம்கொள்ளாத கழுவுதல், கூட்டுதல் சார்ந்த வேலைகளையே புகலிடத் தமிழர்கள் செய்ய வேண்டிய அவலநிலை காணப்பட்டது. இதனை, பொ.கருணாகரமூர்த்தி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"கோடை காலம் பிறக்கவும் ஒரு நாள் இன்று தொடக்கம் புதிதாக வந்த Auslaender (விதேசிகள்) மற்றும் பொருளாதார அகதிகள் எவரும் வேலைகள் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள் என ஜெர்மன் அரசு பட்டவர்த்தமாக அறிவித்தது. விதிவிலக்காக ஒரு உப விதியும் செய்யப்பட்டிருந்தது. அஃது இவர்கள் உணவகங்களில் ஜெர்மன்காரர் செய்ய மனப்படாத கோப்பை கழுவுதல், அதிகாலையில் ஒரு மணிக்கு விடுகளுக்குச் செய்திப்பத்திரிகைகள் விநியோகித்தல் போன்ற சிலவற்றைச் செய்யலாம் என்பதாகும்" (மேலது:107)

மேற்கூறியவற்றுக்கு மேலதிகமாக பிறிதோரிடத்திலும்,

"இங்கும் முப்பது வருஷங்களாக அதிகாலையில் பெர்லினின் எந்தப் பகுதியையாவது ஒருதரம் வலம் வந்தீர்களாயின் அங்கே எங்குலக்கொழுந்தொன்று வண்டியிலோ மிதியுந்தியிலோ பத்திரிகை விநியோகித்துக்கொண்டிருப்பதைக் கண்டேகலாம். அதாவது அஃது நம்மவர்களுக்கேயான தொழில் என்றாகிப் போனது" (மேலது:107).

இலங்கையில் உறவினர்களை விட்டுத் தனித்தனியாகவே பெரும்பாலும் தமிழர்கள் புலம்பெயர்ந்தார்கள். பின்னரே குடும்பத்தினரை இணைத்துக் கொண்டனர். புகலிட நாட்டில் அகதிமுகாம்களில் இருந்தபோதிலும் அகதிகளுக்காகக் கொடுக்கப்படுகின்ற உதவிப் பணத்தில் சிக்கனத்தைப் பேணி உறவினர்களுக்குப் பணம் அனுப்பவேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்பட்டது. அவ்வேளையில் பணம் எப்படிக் கிடைக்கின்றதென்ற கேள்விக்குப் பதிலாக ஏதாவதொரு வேலை செய்வதாகப் பொய்யைச் சொல்லிக் கடிதம் எழுதி அனுப்புகின்ற நிலைமையும் காணப்பட்டுள்ளது. இதனை, பொ.கருணாகரமூர்த்தி பின்வருமாறு பதிவு செய்துள்ளார்.

"சமூக உதவிகள் அலுவலகம் தரும் 300 மார்க்கில் ஒவ்வொருவரும் எப்படியாவது 100 மார்க்கை சேமித்து ஊருக்கு அனுப்பிவிடுவார்கள். பணவிடைச் செலவைக் குறைப்பதற்காக 3 மாசத்துக்கொருமுறை அனுப்புவதே சிக்கனமான நடைமுறை. பணம் எப்படிக்கிடைத்தது எனக்குடையும் வீட்டுக்காரர்களுக்கு கடிதங்களில் ஒரு பூக்கடையில் சிலமணிநேரம் வேலை செய்கின்றேன் என்றோ, ஒரு மளிகைக்கடையில், கடதாசி அட்டைகளில் வரும் பொருட்களைப் பிரித்து விறாக்கைகளில் அடுக்க சிலமணிநேரங்கள் உதவி செய்கிறேன் என்றோ கற்பனைக்கேற்பப் பொய்கள் முடையப்படும்" (மேலது:76)

அதேவேளை சிலர் தமக்கு வழங்கப்படும் உதவிப் பணத்தில் ஒரு தொகையைத் தம் வீடுகளுக்கு அனுப்பவேண்டிய நிலையிருந்தமையால் ஜெர்மனியர்கள் தமது நாய்களுக்கும் பூனைகளுக்கும் உணவாக வாங்கிக்கொடுப்பனவற்றை தாம் வாங்கி உண்டு வாழ்வைக் கழித்தமையையும் இலக்கியங்கள் பதிவுசெய்துள்ளன.

பண்பாட்டு முரண்

பண்பாடு மனிதர்களாலும் அவர்கள் வாழும் சூழலாலும் கட்டமைக்கப்படுவதாகும். 'மனித சிந்தனையையும் நடத்தையையும் சமூகரீதியாக ஒழுங்குபடுத்துவதே பண்பாடாகும்' என்பார் Edward Tylor (கிருஸ்ணராஜா, சோ, 2010:6). பண்பாடு சமூக அடையாளப்படுத்தலின் அடிப்படைக் கூறாகவும் விளங்குகின்றது. ஈழத்தமிழர்க்கெனத் தனித்துவமான பண்பாட்டம்சங்கள் உள்ளன. அது தமிழர்களின் அடையாளமாகப் பார்க்கப்படுகின்றது. காலனித்துவ காலத்திலிருந்து தற்காலம் வரையும் கீழைத்தேய சமூகத்தின் பண்பாட்டு வேர்கள் சிதைவுகளைச் சந்தித்து வரும் அதேவேளை அவற்றைப் பாதுகாக்கும் கரிசனைகளும் இடம்பெறுகின்றன. இச்சூழலில் 'புலம்பெயர்ந்து சென்றோரும் தாம் வாழுகின்ற நாடுகளிலும் தம் பண்பாட்டு நடைமுறைகளை

அடையாளப்படுத்தும் செயற்பாடுகளையே மேற்கொள்கின்றனர்'(Gamlen, 2008:843).

இவ்வழி தமிழர்களும் தாம் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் தம் பண்பாட்டு நடைமுறைகளைத் தொடரவும் அடையாளப்படுத்தவும் முற்படுகின்றனர். எனினும் இது சவால்மிக்கதொன்றாகவே காணப்படுகின்றது. முற்கூறியதன் படி பண்பாடு நிலத்துடனும் மனிதர்களுடனும் தொடர்புடையதென்ற வகையில் தமிழர்களின் பண்பாடும் புலம்பெயர் நாடுகளின் பண்பாடும் வேறுவேறானதாக இருப்பதே இதற்கான அடிப்படையாகும்.

புலம்பெயர் நாடுகளிலேயே பிறந்து அங்குள்ள பிள்ளைகளுடன் பழகி வாழத் தலைப்பட்ட இலங்கைப் புலம்பெயர் பிள்ளைகள் அந்நாடுகளின் பண்பாடுகளையும் பழக்கவழக்கங்களையும் பின்பற்றி நடப்பதும் புலம்பெயர் தேசத்தின் சமுகத்துடன் இணைவாக்கம் பெறுவதும் தவிர்க்கமுடியாததாகும். ஜெர்மனியில் வாழும் புலம்பெயர் தமிழ்ப் பெண்ணாகிய அன்பராசனி, தானொரு ஜெர்மனிய சமுதாயத்தைச் சேர்ந்தவள் என்று ஏற்றுக்கொள்வதை அவளது பின்வரும் கூற்று எடுத்துக்காட்டுகின்றது:

> "நான் ஒரு பல்கலாசார அல்லது பல்லின சமுதாயத்தில் வளர்க்கப்பட்டேன். வேறு வார்த்தைகளில் கூறுவதானால் நான் நூறு வீதம் ஜெர்மன். தமிழ் அல்ல. நான் ஒரு பெருநகரப்பகுதியில் வளர்ந்த தமிழ் தோற்றம் கொண்ட ஒரு ஜெர்மன் குடிமகள்" (Michaelar.Told, 2014:128)

புலம்பெயர் நாடுகளின் பண்பாட்டைக் கைக்கொள்ள முற்படும் தம் பிள்ளைகளின் நடத்தைகளைக் கண்டு பெற்றோர்கள் (இவர்கள் பெரும்பாலும் ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்து சென்று ஈழத்துப் பண்பாட்டை புலம்பெயர் நாடுகளிலும் பேண நினைப்பவர்கள்) அதனைப் பாரிய பண்பாட்டுக்கொலையாக – அதிர்ச்சியாகப் பார்க்கின்றனர். இதனை ஜெர்மனியில் வாழும் புலம்பெயர் தமிழ்ச் சமூகமும் எதிர்கொண்டுள்ளது. பொ.கருணாகரமூர்த்தியின் 'கிழக்கு நோக்கிச் சில மேகங்கள்' நூலிலுள்ள 'பர்வதங்களும் பாதாளங்களும்' என்ற கதை, புலம்பெயர் சூழலில் தன் பிள்ளை தொடர்பாக தாய்க்கு இருக்கும் அச்சமான மனநிலையினை எடுத்துக் கூறுகின்றது.

திருமணத்திற்கு முந்தைய பாலியல் நடத்தை என்பது தமிழ்ப்பண்பாட்டிற்கு முரணானதாகும். ஜெர்மனி வெளிப்படையான பாலியல் நடத்தை கொண்ட நாடாகும். அந்நாட்டில் திருமணத்திற்கு முன்னைய பாலியல் உறவு ஏற்றுக்கொள்ளப்பட்ட பண்பாட்டம்சமாகும். பெற்றோருடன் தமது படிப்பிற்குத் தேவையான பணத்தை எதிர்பார்க்காத அந்நாட்டுப் பிள்ளைகள் பால்வினைச் செயற்பாடுகளில் ஈடுபட்டுப் பணத்தினைச் சம்பாதித்துக் கல்வி கற்கின்ற நிலையும் ஜெர்மனியில் உண்டு. இதனை, பொ.கருணாகரமூர்த்தியின் 'பெர்லின் நினைவுகள்'(2014) என்ற நூல் தெளிவாகக் கூறுகின்றது. இத்தகைய பால்வினைப் பண்பாட்டைக்கொண்ட நாட்டில் தமிழர் பண்பாட்டை சிதையாமற் பேணுவதென்பது சவால் மிக்கதாகவே உள்ளது. தமிழர் பண்பாட்டை அழியாது பேண முற்படும் இலங்கைப் புகலிடத் தமிழர்கள் தம் பிள்ளைகளுக்கு

இலங்கையில் திருமண சம்பந்தங்களைச் செய்துகொள்வதும் உண்டு. எனினும் இருவேறுபட்ட பண்பாட்டுச் சூழல்களுக்குள் வாழ்ந்து பின்னர் இணைந்து வாழ்கின்றபோது முரண்பாடுகள் காரணமாகப் பிரிந்துசெல்கின்ற நிலையும் காணப்படுகின்றது.

புலம்பெயர்ந்து வாழும் சமூகமொன்று தன் தாய்நாட்டின் பண்பாட்டு அடையாளங்களை இழத்தல் பொதுவானதொரு அம்சமாகும். இதற்குப் புலம்பெயர் தமிழ்ச் சமூகமும் விதிவிலக்கல்ல என்பதை ஜெர்மனிய புலம்பெயர் தமிழ் இலக்கியங்கள் ஆதாரப்படுத்துகின்றன.

கல்வி நிலை

இலங்கையில் இடம்பெற்ற கொடிய யுத்தம் தமிழர்களின் கல்வியில் பெருத்த தாக்கங்களை ஏற்படுத்தியது. இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களைச் சேர்ந்த பெருமளவான இளைய சமூகத்தினர் போராட்டத்தில் பங்கெடுத்தனர். இதனால் 1980களுக்குப் பின்னர் தமிழர் கல்வியில் வீழ்ச்சிகள் ஏற்பட்டன. இப்பின்புலத்தில் இக்காலப்பகுதியில் புலம்பெயர்ந்து சென்ற தமிழர்கள் தாம் புகலிடம் பெற்ற நாடுகளில் தமிழர் கல்வியை வளர்க்கும் நடவடிக்கைககளில் ஈடுபட்டனர். குறிப்பாக, புலம்பெயர் தமிழர்கள் தமிழ்மொழி, தமிழ்ப்பண்பாடு, தமிழர் ஒருங்கிணைப்பு என்பவற்றை நோக்காகக் கொண்டு தமிழ்ப் பள்ளிக்கூடங்களை உருவாக்கினர். புலம்பெயர் நாடுகளில் தமிழ்ப் பள்ளிக்கூடங்களை நிறுவிச் செயற்பட்டமை தொடர்பாக துசிந்தா சோமலிங்கம் குறிப்பிடும் பின்வரும் கூற்று நோக்கத்தக்கதாகும்:

> "1980களிலிருந்து புலம்பெயர்ந்த தமிழர்கள் ஒரு தன்னாட்சி மற்றும் இறையாண்மை கொண்ட தாயகத்திற்கான விருப்பத்தால் உந்தப்பட்டு, தமிழ்க் கலாசாரத்தை மையப்படுத்திய கல்வியில் வலுவான அர்ப்பணிப்பை வளர்த்துக்கொண்டனர். அவர்களின் மொழி மற்றும் கலாசார பாரம்பரியத்தை இழப்பதைத் தடுக்க புலம்பெயர்ந்த காலத்தின் தொடக்கத்தில் தமிழ்ப்பள்ளிக் கூடங்களை சிறிய அளவிலான உள்ளூர் நட்பு மற்றும் குடும்ப சேவைகளாகத் தொடங்கினர். பின்னர் அவை புலம்பெயர்ந்த எல்லா நாடுகளிலும் நிறுவனமயமாக்கப்பட்டன" (Thusinta Somalingam , 2015:178).

2014 இல் மேற்கொண்ட ஆய்வில் ஜெர்மனியில் 6500 மாணவர்களையும் 941 தொண்டர் ஆசிரியர்களையும் கொண்ட 136 பாடசாலைகள் உள்ளமையை துசிந்தா சோமலிங்கம் குறிப்பிட்டுள்ளார். இப்பள்ளிக்கூடங்களின் செயற்பாடுகள் இலங்கையின் புலம்பெயர் சிறுவர்களை நோக்காகக் கொண்டிருந்தமையை அவரது பின்னுள்ள கூற்று எடுத்துக் கூறுகின்றது:

> "இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து வந்த தமிழ்க்குழந்தைகளுக்காகவே இப்பள்ளிக்கூடங்கள் அமைக்கப்பட்டன. ஏனெனில் இங்கே இலங்கைத் தமிழரின் மொழி மற்றும் கலாசாரங்கள் மட்டுமே கற்பிக்கப்படுகின்றன" (மேலது:180)

புலம்பெயர் தமிழ்ச்சிறுவர்கள் தமிழ்ப்பள்ளிக்கூடங்களிலும் ஜெர்மனிய பள்ளிக்கூடங்களிலும் கல்வியைப் பெற்றுக்கொள்ளும் செயற்பாடுகள் நடைபெற்றன. எனினும் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து சென்றோருக்கான கல்வி என்பது சவால்மிக்கதொன்றாகவே காணப்பட்டது. குறிப்பாக எண்பதுகள் காலப்பகுதியில் புலம்பெயர்ந்து சென்றவர்களில் பலர் இலங்கையிலிருந்து எத்தகைய கல்வி நிலையுடன் சென்றார்களோ அதே நிலையுடனேயே வாழவேண்டிய நிலை ஜெர்மனியில் இருந்தது. ஜெர்மனிய மொழியின் கடினதன்மை, குடும்பச்சுமை, வயது நிலை இவை காரணமாக முதலாவது பரம்பரையைச் சார்ந்த தமிழர்களின் கல்வி நிலை பாதிக்கப்பட்டது.

ஜெர்மனிய மொழிப் பரிச்சயம் இன்மையால் பெற்றோர் தமது பிள்ளைகள் கற்கும் பாடசாலையுடனோ ஆசிரியர்களுடனோ தொடர்புகளைப் பேணுவதிலும் சவால்களை எதிர்கொள்ளும் நிலை காணப்பட்டது. அதேவேளை அந்நியப்படுத்தப்பட்ட – உறவுகளின் தொடர்பற்ற ஜெர்மனிய சூழல் காரணமாக பெற்றோர் 'கசட்' பார்ப்பதை ஒரு தீவிர பொழுதுபோக்குச் செயற்பாடாக மேற்கொள்ளும் நிலையும் அதனால் குழந்தைகளின் கல்வி கற்கும் சூழல் அற்றுப்போன நிலையும் ஜெர்மனியில் பரவலாகக் காணப்படுகின்றது. 'அத்திவாரமில்லாத கட்டடங்கள்' சிறுகதை கல்வி கற்கும் சூழலை இழந்து நிற்கும் வினோத்தின் பரிதாப நிலையினை எடுத்துக் கூறுகின்றது.

ஒடுக்குதலை எதிர்கொள்ளல்

புலம்பெயர்ந்து சென்ற தமிழர்கள் தாம் புகலிடம் பெற்ற நாடுகளிலுள்ள அடிப்படை வாத மற்றும் தீவிர போக்குடையவர்களால் நிறம், மொழி சார்ந்து பல்வேறு விதமான ஒடுக்குமுறைகளை எதிர்கொண்டனர். குறிப்பாக நவநாஜிகள் புலம்பெயர் தேசத்தில் பிறநாட்டவர்களின் நடத்தைகளைக் கண்டு பொறாமைப்படுபவர்களாகவும் கலவரங்கள் செய்பவர்களாகவும் காணப்பட்டனர். ஜெர்மனி, சுவிஸ், நோர்வே, பிரான்ஸ் முதலான நாடுகளில் நவநாஜிகளின் செயற்பாடுகள் விதேசிகளைத் துன்பப்படுத்தும் வகையில் காணப்படுகின்றன. ஜெர்மனியில் வாழும் தமிழர்கள் நவநாஜிகளால் பாதிப்புக்கு உள்ளாகுவதை பார்த்திபன் கனவை மிதித்தவன் நாவலில் எடுத்துக் கூறியுள்ளார்.

புகலிட தேசத்தில் கறுப்பின மக்களுக்கெதிரான பொதுவான ஒரு ஒடுக்குதலாக நிறவாதம் காணப்படுகின்றது. கறுப்பினத்தவர்கள் கீழ்த்தரமானவர்கள் என்பதுடன் வறுமையுற்ற நாடுகளிலிருந்து வந்தவர்கள் என்றும் கருதும் மனோநிலை வெள்ளை இனத்தவர்களின் ஒரு பகுதியினரிடம் காணப்படுகின்றது. குறிப்பாக அடிப்படைவாத செயற்பாடுகளை மேற்கொள்ளும் சுதேசிகளிடம் காணப்படுகின்றது. இதனாலேயே அவர்கள் தமிழர்கள் உள்ளிட்ட கறுப்பின மக்களை கறுப்புப் பன்றிகள், பன்றி நாய், பன்றி அகதி முதலான சொற்களைப் பயன்படுத்தி தமிழர்கள் மீது வெறுப்பையும் கோபத்தையும் வெளிப்படுத்துகின்றார்கள். புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களில் பெரும்பாலானோர் யாழ்ப்பாணத் தமிழர்களாவர். இவர்கள் சாதிமேலாண்மைச் சமூகத்திற்குள் வாழ்ந்தவர்கள். ஏனைய சமூகங்களை ஒடுக்கியவர்கள் ஒரு

பகுதியினர். ஒடுக்கப்பட்டவர்கள் ஒரு பகுதியினர். இவர்கள் யாவரும் புகலிட நாடுகளில் நிறவாதம், இனவாதம், வேற்று நாட்டவர்கள் என்ற அடிப்படைகளில் துயரங்களை அனுபவிப்பவர்களாக மாறியிருப்பதையே பல இலக்கியங்கள் பிரதிபலித்து நிற்கின்றன. பார்த்திபனின் 'அத்திவாரமில்லாத கட்டடங்கள்' சிறுகதை, ஜெர்மனிய பாடசாலையில் கல்வி கற்கும் தமிழ்ச் சிறுவனான வினோத், மார்க்கோஸ் என்ற வெள்ளை இனச் சிறுவனால் கறுப்பன் என்றும் கறுப்பனே உனது நாட்டுக்குப்போ என்றும் கூறி துன்புறுத்துவதை எடுத்துக் கூறுகின்றது.

> "பந்தை எடுக்க ஓடிவந்த வினோத் தவிர்க்க முடியாமல் மார்க்கோஸின் காலை மிதித்து விட்டான். யாரும் எதிர்பார்க்காத விதமாக மார்க்கோஸ் வினோத்தை அடித்து விட்டான்.
> 'கறுப்பன்'
> வினோத்துக்கு அடியுடன் அவன் பின்னர் சொன்னதும் சேர்ந்து வலித்தது. கண்கள் திரையிட கன்னத்தைத் தடவியபடி புத்தகப் பையைத் தூக்கிக் கொண்டான்.
> யாரும் அவனுக்கு ஆதரவாகக் கதைக்கவுமில்லை. நடந்ததை விசாரிக்கவுமில்லை. கொஞ்ச நேரம் மௌனமாக நின்று விட்டு மறுபடி தங்கள் விளையாட்டுகளைத் தொடர்ந்தார்கள்..
> 'உன்னுடைய நாட்டுக்குத் திரும்பிப் போ'
> பின்னால் மார்க்கோஸ் கத்துவது வினோத்துக்குக் கேட்டது. கண்ணீர்த் துளியொன்று வலிக்கும் கன்னத்தைத் தடவி விழுந்தது.
> 'எந்த நாடு?'
> 'நான் எங்க போக வேணும்?'
> 'நான் ஏன் இங்க இருக்க வேணும்?'
> 'என்னோட படிக்கிற எல்லாரும் வெள்ளையாயிருக்க நான்மட்டும் ஏன் கறுப்பாயிருக்க வேணும்?'
> 'நான் கதைக்கிற பாசை மட்டும் ஏன் வேறயாயிருக்க வேணும்?'
> 'ஏன் என்னோட ஒருத்தரும் வடிவாப் பழகினமில்லை?'
> 'ஏன் மார்க்கோஸ் அடிச்சவன்?'
> எந்த ஒரு கேள்விக்கும் வினோத்தால் விடை தெரிந்துகொள்ள முடியவில்லை. தன்னை எல்லோரும் விரட்டுவது போலவும், கேலி செய்வது போலவுமான உணர்வு அவனை வருத்தியது.
> ....
> வினோத் களைத்துத் தூங்கிப் போயிருந்தான். கனவில் மார்க்கோஸ் வந்து 'கறுப்பனே உனது நாட்டுக்குப் போ' என்று காலால் உதைத்தான்" (பார்த்திபன், 1989:87).

மேலதிக வகுப்பு வசதிகளுடன் டொச் பாடத்தை மிகுந்த கவனத்துடனும் ஈடுபாட்டுடனும் கற்று வரும் சினேகாவுக்கு, திறமைக்கு ஏற்ற 'புள்ளி' பரீட்சையில் கிடைக்காமல் போனமைக்கு இனவாதமே காரணமென்பதை நிருபாவின் 'உங்களுடைய மகள் நல்ல கெட்டிக்காரி' கதை எடுத்துக் கூறுகின்றது. சினேகாவின் தாய் கல்யாணி தன் மகளின் படிப்பு காரணமாகப் பாடசாலைக்குச்

சென்றபோது வகுப்பாசிரியை குறிப்பிடும் பின்வரும் கருத்துக்கள் கவனிக்கத்தக்கவையாகும்.

> 'திருமதி செல்வன், எனக்கு உங்களோட கதைத்துக்கொண்டிருக்க நேரம் இல்லை. உங்கட பிள்ளை மற்றப்பிள்ளைகளிலும் கெட்டிக்காரிதான்'
>
> 'எந்த மற்றப்பிள்ளைகள்'
>
> 'இந்த வகுப்பில் படிக்கும் மற்ற வெளிநாட்டுப் பிள்ளைகள் வடிவாகப் படிக்கவே மாட்டார்கள். உங்கட பிள்ளை நாலு எடுத்திருக்கிறா. எனது மாணவி என்கின்ற முறையில் இந்தப் புள்ளி திருப்திதான். உங்கட பிள்ளை ஜெர்மன் நாட்டவள் இல்லத்தானே. ஜெர்மன் மொழி உங்கட சொந்த மொழி இல்லத்தானே. அந்த வகையில் அவா எடுத்த புள்ளி நல்லதுதான் (நிருபா,2005:47)

மேற்கூறியவாறு நவநாஜிகளின் செயற்பாடுகளினாலும் நிறவாதத்தினாலும் தமிழர்கள் மட்டுமன்றி கறுப்பினத்தவர் உள்ளிட்ட புலம்பெயர் சமூகம் சவால்களை எதிர்கொள்ளும் நிலை காணப்படுகின்றது. ஜெர்மனி பல்பண்பாட்டை ஏற்றுக்கொண்ட நாடாகவுள்ளபோதிலும் இதற்கு அடிப்படைவாத செயற்பாடுடைய சிறு பிரிவினரே காரணமாகவுள்ளனர்.

குடும்பச்சிக்கல்

குடும்ப உறவு நிலை சார்ந்து ஏற்படும் சிக்கல்களையும் புலம்பெயர் இலக்கியங்கள் பதிவுசெய்துள்ளன. புகலிடச் சூழலிலும் சீதனத்தினால் பெண்கள் பாதிக்கப்படுதல் தொடர்ந்தவண்ணமே இருப்பதை புகலிடப் படைப்புக்கள் எடுத்துக் கூறுகின்றன. பார்த்திபனின் 'கல்லான கணவன்' சிறுகதை, உறவுகளின் தொடர்பற்ற புகலிட வாழ்வில் அன்பாக வழிநடத்தப்படவேண்டிய பெண், அவளது கணவனால் சீதனத்தை காரணமாக வைத்து துன்புறுத்தப்படுவதை எடுத்துக் கூறுகின்றது. பார்த்திபனின் 'ஆண்கள் விற்பனைக்கு' நாவலும் சீதனக் கொடுமையினையே எடுத்துக் கூறுகின்றது.

பெண்களுக்கெதிரான வன்முறைகள் பல தளங்களிலும் நிகழ்ந்துகொண்டிருக்கும் நிலையில் புகலிட நாடுகளில் வாழும் பெண்களும் தமது கணவன்மாரால் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுவதை காணக்கூடியதாகவுள்ளது. பார்த்திபனின் 'கல்லான கணவன்' சிறுகதை, உறவுகளின் தொடர்பற்ற புகலிட வாழ்வில் அன்பாக வழிநடத்தப்படவேண்டிய பெண் அவளது கணவனால் துன்புறுத்தப்படுவதை எடுத்துக் கூறுகின்றது.

புலம்பெயர் நாடுகளில் தமிழ் இளைஞர்கள் அந்நாட்டுப் பெண்களைத் திருமணம் செய்கின்ற நிலைப்பாடு காணப்படுகின்றது. தமிழ்ப்பண்பாட்டினால் ஈர்க்கப்பட்ட அந்நாட்டுப் பெண்கள், இலங்கையிலிருந்து சென்ற புலம்பெயர் இளைஞர்களைத் தீரமணம் செய்ய விரும்புகின்றமையும், இளைஞர்கள் தாம் அந்நாட்டின் குடியுரிமையைப் பெற்றுக்கொள்வதற்கும் பணத்தைப் பெறுவதற்கும் ஓர் உபாயமாக அந்நாட்டின் பெண்களைத் திருமணம் செய்துகொள்ள

விரும்புகின்றமையும் இதற்கான முக்கிய காரணமாகவுள்ளன. பொ.கருணாகரமூர்த்தியின் 'பெர்லின் நினைவுகள்' நூலில் பாலியல் நடத்தையில் ஈடுபடும் ஜெர்மனிய பெண்ணின் கூற்றாக வரும் பின்வரும் பகுதி இங்கு குறிப்பிடத்தக்கதாகும்:

> "எத்தனையோ இளைஞர்கள், அதிலும் குறிப்பாக வெளிநாட்டுக்காரர்கள் தங்கள் விசாப் பிரச்சினையைச் சமாளிக்கவோ, பணத்துக்காகவோ நடுவயதும் கடந்த பெண்களைத் திருமணம் செய்து கைகோர்த்து இழுத்துக்கொண்டு திரிகிறார்களே" (கருணாகரமூர்த்தி,பொ. 2014:374)

தம் சமூக அமைப்பே மேலானது என்று கருதும் மனநிலை தமிழ்ச்சமூகத்தினரிடையேயும் காணப்படுகின்றது. இம்மனப்பாங்கு ஜெர்மனிய மக்களைப் புரிந்துகொள்வதற்கும் அவர்களுடன் பழகுவதற்கும் தடையாக உள்ளது. ஜெர்மனிய பெண்களைத் தமிழ் இளைஞர்கள் திருமணம் செய்தபோதும் பெரும்பாலான திருமணங்கள் நிலைக்கவில்லை. தமிழ் இளைஞர்கள் தமிழ்ப் பெண்களை எப்படி நினைக்கின்றார்களோ அதனைப் போன்றே தாம் காதலிக்கும் ஜெர்மனிய பெண்களையும் நோக்க முற்பட்டனர். இந்நிலையினை ஜெர்மனிய பெண்களால் சகித்துக் கொள்ளமுடியவில்லை. பார்த்திபனின் 'காதல்' சிறுகதை தமிழ் இளைஞனான ஜீவனுக்கும் ஜெர்மனிய(டொச்) பெண்ணான ஸில்வியாவுக்கும் முளைத்த காதல் அறுந்து போனமையையும் ஜெர்மனிய பெண்ணை ஜெர்மனிய பண்பாட்டுப் புரிதலுடன் ஏற்றுக்கொள்ள முடியாத தமிழ் இளைஞனின் நிலையினையும் எடுத்துக் கூறுகின்றது. குறிப்பாக ஆண் மேலாதிக்கம் பெற்று நிற்பதையும் ஆணுக்குப் பெண் சரி நிகர் என்ற நிலையினை ஏற்றுக்கொள்ளாத ஆண் வர்க்கத்தின் நிலைப்பாட்டினையும் இன்னும் சுருங்கக்கூறின் இன்னும் மாறாத தமிழ்ச் சமூகத்தின் குடும்ப அதிகார நடத்தைசார் கீழ்நிலையினையும் இச்சிறுகதையினூடாகப் பார்த்திபன் எடுத்துக் கூறியுள்ளார்.

முடிவுரை

1980களின் காலப்பகுதியில் இருந்து இலங்கையில் இடம்பெற்ற இனமுரண்பாட்டுச் சூழல் காரணமாகப் புலம்பெயர்ந்து சென்ற தமிழர்களுக்கு அந்நாடுகள் புகலிடமளித்தன. அதன் காரணமாக வெவ்வேறு நாடுகளிலும் புலம்பெயர் தமிழ்ச் சமூகங்கள் உருவாக்கம்பெற்றன. அப்பின்புலத்திலேயே ஜெர்மனியிலும் வெவ்வேறு நாட்டுப் புலம்பெயர்வாசிகளுள் ஒரு பிரிவாகப் புலம்பெயர் தமிழ்ச் சமூகமும் உருவாக்கம் பெற்றது. ஒரு நாட்டை விட்டு நீங்கிப் பிறிதொரு நாட்டில் சென்று வாழ்கின்றபோது எதிர்கொள்கின்ற புதிய அனுபவங்களைப் புலம்பெயர் தமிழ்ச்சமூகமும் ஜெர்மனியில் எதிர்கொள்ளவேண்டியிருந்தது. அவ்வனுபவங்கள் அகதிநிலை, தொழில், கல்வி, பண்பாடு, மொழி, காலநிலை என விரிந்து அமைந்தன.

புலம்பெயர்ந்து சென்று தாயக ஏக்கங்களையும் போரின் கொடிய தன்மைகளையும் வெளிப்படுத்திய இலக்கியங்களின் தேவை இன்று அற்றுப்போயிருக்கின்றன. இலங்கையில் போர் ஓய்ந்து பத்து வருடங்கள் கடந்திருக்கின்றன. போருக்குப் பின்னரான ஈழச்சூழல் பற்றிப் புலம்பெயர்

எழுத்தாளர்கள் எழுதுவதும் குறைந்துவிட்டது. இப்பின்னணியில் ஒருகாலத்தில் தமிழர்களின் அகதி வாழ்வு பற்றிய அனுபவங்களை ஜெர்மனிய புலம்பெயர் தமிழ் இலக்கியங்களின் வழியே அறிந்துகொள்ள வேண்டியுள்ளது. அவ்வகையில் ஜெர்மனிய தமிழ்ச் சமூகத்தின் வாழ்வியலைப் பிரதிபலிப் பினவாகவுள்ள இலக்கியங்கள் முக்கியமானவையாகும்.

புலம்பெயர்ந்து சென்ற புதிதில் தமிழர்கள் எதிர்கொண்ட அகதி வாழ்க்கை, மொழி, காலநிலை என்பவற்றுக்கு முகங்கொடுத்தலுடன் தொடர்புடைய அனுபவங்கள் தற்போது பழையனவாகிவிட்டன. அவை பற்றிய எழுத்துக்களின் அவசியமும் காலவதியாகிவிட்டன. ஏனைய புலம்பெயர் தேசங்களில் தமிழர்கள் தாம் வாழும் நாடுகளுக்கு ஏற்ப வாழ முற்படுவதைப்போன்றே ஜெர்மனியிலும் வாழத்தலைப் பட்டுவிட்டார்கள். இச்சூழ்நிலையில் புலம்பெயர்ந்து சென்ற மூத்த தலைமுறையைச் சார்ந்தோர் தமது பண்பாட்டு அடையாளங்களை நிலைநிறுத்த முடியாதவர்களாகக் காணப்படுகின்றனர்.

புலம்பெயர் தமிழ்ச் சமூகத்திற்கும் இலங்கைத் தமிழ்ச் சமூகத்திற்குமான தொடர்புகள் எதிர்காலத்தில் குறைந்து செல்வதற்கும் புலம்பெயர் இலக்கியத்தின் வளர்ச்சி குன்றிப் போவதற்குமான சமூகச்சூழல் பலமாக உருவாகி வருகின்றது. முதலாவது புலம்பெயர் தலைமுறையினர் நாற்பது வருடங்களைக் கழித்துவிட்டனர். அத்தலைமுறையும் அதற்கு அடுத்த தலைமுறையுமே தமிழ்ப் பண்பாட்டை நிலைநிறுத்தும் போக்குடையவர்களாகக் காணப்பட்டவர்கள். அத்தலைமுறையினரே புலம்பெயர் இலக்கியத்தில் இலங்கைத் தமிழ்ர் என்ற பிரக்ஞையை அடையாளப்படுத்தினார்கள். மொழி, பண்பாட்டு நடைமுறை சார்ந்து புலம்பெயர் சமூகம் அடையாளங்களை இழக்கும் நிலை காணப்படுகின்றது. இது தவிர்க்க முடியாததொன்றாகும். தம் முந்தையோர் இலங்கைத் தமிழர் என்ற அடையாளம் அற்றவர்களாக வாழுகின்ற இன்றைய இளைய சமூகத்தினரிடம் இதனை எதிர்பார்க்கமுடியாத நிலை உருவாகியிருப்பதைப் புலம்பெயர் தமிழ் இலக்கியங்களினூடாக அறிய முடிகின்றது. ஜெர்மனிய புலம்பெயர் இளைய சமூகத்தினரிடையே தற்போது தமிழில் எழுத முடியாத சூழல் உருவாகியிருக்கின்றது. அதன்காரணமாக ஆங்கிலத்திலும் ஜெர்மன் மொழியிலும் இலக்கியங்களை எழுதுகின்ற நிலை காணப்படுகின்றது.

துணைநூற்பட்டியல்

- ❖ கருணாகரமூர்த்தி, பொ. (2014), *பெர்லின் நினைவுகள்*, காலச்சுவடு பப்ளிகேசன்: சென்னை
- ❖ கருணாகரமூர்த்தி, பொ. (1996), *கிழக்கு நோக்கிச் சில மேகங்கள்*, ஸ்நேகா: சென்னை
- ❖ கருணாகரமூர்த்தி, பொ. (1996), *ஒரு அகதி உருவாகும் நேரம்*, ஸ்நேகா: சென்னை
- ❖ நிருபா, (2005), *அச்சாப்பிள்ளை*, கொழும்பு: ஈகுவாலிற்றி கிரபிக்ஸ்
- ❖ பார்த்திபன், (1989), *கல்லான கணவன்*, தூண்டில், ஜெர்மனி
- ❖ பார்த்திபன், (1989), *அத்திவாரமில்லாத கட்டிடங்கள்*, தூண்டில், ஜெர்மனி

- பார்த்திபன், (2017), *கதை*, சுவிட்சர்லாந்து: தமிழச்சு
- பார்த்திபன், (1988), *கனவை மிதித்தவன்*, தூண்டில் சஞ்சிகை, ஜெர்மனி
- பார்த்திபன், (1998), *ஆண்கள் விற்பனைக்கு*, மேற்கு ஜெர்மனி: தென்னாசிய நிறுவனம்
- AKM Ahsan Ullah & Asiyah Az-Zahra Ahmad Kumpoh (2019), *Diaspora community in Brunei: culture, ethnicity and integration*, Diaspora Studies, 12:1, 14-33, DOI: 10.1080/09739572.2018.1538686
- Gamlen,A. (2008), *The Emigration state and the modern Geopolitical imagination, political Geography*,27,no.8:840-856
- Ishan Ashutosh (2013), *Immigrant protests in Toronto: diaspora and Sri Lanka's civil war*, Citizenship Studies, 17:2, 197-210, DOI: 10.1080/13621025.2013.780739
- Michaelar.Told., (2014), *Identity, Belonging and Political activism in the Sri Lankan Communities in Germany*, London: University of East London
- Thusinta Somalingam (2015), *"Doing-ethnicity" – Tamil educational organizations as socio-cultural and political actors*, Transnational Social Review, 5:2, 176-188, DOI: 10.1080/21931674.2015.1053332

****

மதிப்பிடப்பெற்றது

தமிழியல் ஆய்வு முன்னோடி நிறுவனம்: பாண்டிச்சேரி பிரஞ்சு ஆய்வு நிறுவனம்

Pioneer Institute in Tamil studies: Institute Français de Pondichéry

முனைவர் வெங்கடேசன் பிரகாஷ்/Dr. Venkatesan Prakash[2]

Abstract

The relationship between Tamil and French begins with the establishment of the French East India Company in 1674 by French obtaining Pondicherry from the Sultan of Bijapur. French-Tamil and Tamil-French dictionaries of Muse and Dubui in the nineteenth century, and verbs in the Dravidian languages of Julian Wenso, texts on Tamil grammar in French, Chintamani translation in French, Translation of Thirukkural by Gnana Thiago, translation of Acharakovai, Naladiyar, Nanmanikadai, Gambaramayana Sundarakandam in the nineteenth and twentieth centuries have made a great contribution to the prosperity of the Tamil language. In the background, the French Institute of Research, Pondicherry was established in 1955 to conduct research on the people, culture, nature, etc. of India, based on the agreement between the French Government and the Government of India. The role and importance of South India in the history of India in particular is constantly being explored through research. This article identifies this.

ஆய்வுச்சுருக்கம்

கி.பி.1674ஆம் ஆண்டில் பிரஞ்சு கிழக்கிந்திய நிறுவனம் அன்றைய பாண்டிச்சேரியுடன் வணிகத் தொடர்பு மேற்கொண்டதிலிருந்து தமிழுக்கும் பிரஞ்சுக்குமான உறவு தொடங்குகிறது எனலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டில் முசே, துபுய் ஆகியோரின் பிரஞ்சு தமிழ் மற்றும் தமிழ் பிரஞ்சு அகராதிகள், பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டில் ஜூலியன் வென்சொ அவர்களின் திராவிட மொழிகளில் வினைச்சொற்கள், சமண பௌத்த மதச் சான்றோர்கள், பிரஞ்சு மொழியில் தமிழ் இலக்கணம், சிந்தாமணி மொழிபெயர்ப்பு முதலான நூல்கள், ஞானோ தியாகு அவர்களின் திருக்குறள் பிரஞ்சு மொழிபெயர்ப்பு, ஆசாரக்கோவை மொழிபெயர்ப்பு, நாலடியார், நான்மணிக்கடிகை, கம்பராமாயண சுந்தரகாண்டம் ஆகியவற்றின் மொழிபெயர்ப்புகள் முதலான அறிஞர்கள் தமிழ் மொழியின் செழுமைக்கு மிகச் சிறந்த பங்களிப்பைச் செய்துள்ளனர். இதன் பின்னணியில், பாண்டிச்சேரி பிரஞ்சு ஆய்வு நிறுவனம் 1955ஆம் ஆண்டு பிரஞ்சு அரசுக்கும் இந்திய அரசுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்திய மக்கள், பண்பாடு, இயற்கை, முதலானவை குறித்து ஆராய்ச்சி செய்வதற்காகத் தொடங்கப்பட்ட நிறுவனம். குறிப்பாக இந்தியாவின் வரலாற்றில் தென்னிந்தியாவின் பங்களிப்பையும் முக்கியத்துவத்தையும் தொடர்ச்சியாக ஆராய்ச்சிகளின் மூலமாக வெளியிட்டுவருகின்றது. இதனை அடையாளப் படுத்துகின்றது இக்கட்டுரை.

[2] ஆராய்ச்சியாளர், பாண்டிச்சேரி பிரஞ்சு ஆய்வு நிறுவனம், புதுச்சேரி

குறிச்சொற்கள் : தமிழியல், ஆய்வு முன்னோடி, பாண்டிச்சேரி, பிரஞ்சு ஆய்வு நிறுவனம், Tamil studies, Pondichéry

கி.பி. 1674 ஆம் ஆண்டில் பிரஞ்சு கிழக்கிந்திய நிறுவனம் அன்றைய பாண்டிச்சேரியுடன் வணிகத் தொடர்பு மேற்கொண்டதிலிருந்து தமிழுக்கும் பிரஞ்சுக்குமான உறவு தொடங்குகிறது எனலாம் (https://www.britannica.com/place/Puducherry-union-territory-India). பத்தொன்பதாம் நூற்றாண்டில் முசே (Louis Marie Mousset), துடுய் (Louis Savinien Dupuis) ஆகியோரின் பிரஞ்சு தமிழ் மற்றும் தமிழ் பிரஞ்சு அகராதிகள், பத்தொன்பது மற்றும் இருபதாம் நூற்றாண்டில் ஜூலியன் வென்சொ (Julien Vinson) அவர்களின் திராவிட மொழிகளில் வினைச்சொற்கள், சமண பௌத்த மதச் சான்றோர்கள், பிரஞ்சு மொழியில் தமிழ் இலக்கணம், சிந்தாமணி மொழிபெயர்ப்பு முதலான நூல்கள் (உ.வே.சா.வுக்கும் இவருக்கும் இருந்த தொடர்பை உ.வே.சா வின் பதிப்புரைகளிலிருந்தும் கடிதப் போக்குவரத்திலிருந்தும் தெரிந்துகொள்ளலாம்) (வேங்கடாசலபதி, 2018, ப. 308,312,374,409,525.), ஞானோ தியாகு (Gnanou Diagou) அவர்களின் திருக்குறள் பிரஞ்சு மொழிபெயர்ப்பு, ஆசாரக்கோவை மொழிபெயர்ப்பு, நாலடியார், நான்மணிக்கடிகை, கம்பராமாயண சுந்தரகாண்டம் ஆகியவற்றின் மொழிபெயர்ப்புகள் முதலான அறிஞர்கள் தமிழ் மொழியின் செழுமைக்கு மிகச் சிறந்த பங்களிப்பைச் செய்துள்ளனர். இதன் பின்னணியில், பாண்டிச்சேரி பிரஞ்சு ஆய்வு நிறுவனம் 1955 ஆம் ஆண்டு பிரஞ்சு அரசுக்கும் இந்திய அரசுக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்திய மக்கள், பண்பாடு, இயற்கை, முதலானவை குறித்து ஆராய்ச்சி செய்வதற்காகத் தொடங்கப்பட்ட நிறுவனம் (https://www.ifpindia.org /content/indology). குறிப்பாக இந்தியாவின் வரலாற்றில் தென்னிந்தியாவின் பங்களிப்பையும் முக்கியத்துவத்தையும் தொடர்ச்சியாக ஆராய்ச்சிகளின் மூலமாக வெளியிட்டுவருகின்றது. பிற்காலத்தில் வரலாறும் இலக்கியமும் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டன. இந்நிறுவனத்தின் அடிப்படை நோக்கமாகக் கீழ்க்கண்டவற்றைப் பட்டியலிடலாம்.

- தமிழுக்கான அடிப்படை ஆதார நோக்கு நூல்களை உருவாக்குதல்
- செம்பதிப்புகளை உருவாக்குதல்
- மொழிபெயர்ப்புகளைக் கொண்டுவருதல்

இந்நிறுவனத்தில் நான்கு துறைகள் செயல்படுகின்றன.

- இந்தியவியல் துறை (தற்காலத் தமிழ், சமஸ்கிருதம்)
- சூழலியல் துறை (தென்னிந்தியாவின் பல்லுயிர்ச் சூழல், மேற்குத் தொடர்ச்சிமலை, கம்போடியா முதலான தென்கிழக்காசிய நாடுகளின் சூழலியல்)
- சமுகவியல் துறை (தமிழகத்தில் உழைப்பு, கடன், நீர் மேலாண்மை, உணவுக் கலாச்சாரம், மரபு, பிராந்தியக் கணிதம், தமிழகத்தில் மீனவச் சமுதாயம்)

- புவிவரைபடவியல் துறை (எண்ணிய அடிப்படையில் புவியைப் படம் பிடித்தல், வரைபடம் உருவக்குதல், செயற்கைக்கோள் துணையுடன் பருவ மாற்றத்தை ஆராய்தல்)

இந்நான்கு துறைகளும் ஒன்றோடு ஒன்று இணைந்து இலக்கியம், பண்பாடு, சமூகம், சுற்றுச்சூழல் பற்றித் தொடர்ச்சியாக இயங்கி வருகின்றன.

இந்தியவியல் துறை

நிறுவனம் தொடங்கப்பட்ட 1955ஆம் ஆண்டு முதல் இந்தியவியல் துறையும் சூழலியல் துறையும் புவிவரைபடவியல் துறையும் இங்கு செயல்பட்டுவருகின்றன. தேர்ந்த ஆராய்ச்சிக்கு ஒருங்கிணைந்த பார்வை தேவை என்பதை உணர்ந்த இந்நிறுவனம் ஒரு ஆராய்ச்சிக்கு அடிப்படைகளாகக் கீழ்க்காணும் அணுகுமுறைகளை வகுத்துக்கொண்டு செயல்பட்டது.

- ஒரு ஆராய்ச்சிக்குக் கிடைக்கின்ற அனைத்துத் தரவுகளையும் ஒருசேரத் தொகுத்தல்
- அடைவு உருவாக்குதல் (சொல்லடைவு, பொருளடைவு)
- பிற இலக்கியங்களில், புராணங்களில் பயின்று வரும் தகவல்களைத் தொகுத்தல்
- வரலாற்று ஆதாரங்களைத் தொகுத்தல் (கல்வெட்டு, செப்பேடு, பயணக் குறிப்புகள்)
- சூழலியல் சார்ந்த தகவல்களைத் தொகுத்தல் (தாவர விவரங்கள், நிலவியல் மாற்றங்கள் முதலானவை)
- கலைசார் தகவல்களைத் தொகுத்தல் (கட்டிடம், ஓவியம், சிற்பம், நகர அமைப்பு முதலானவை)
- பிற வரலாற்றுப் பண்பாட்டுக் காரணிகளைத் தொகுத்து ஒப்பீடு செய்தல் (பிற நாட்டு வரலாற்றுக் குறிப்பு, வணிகத் தொடர்பு, பிற நாட்டுக் கல்வெட்டு ஆதாரம் முதலானவை)
- மொழியியல் மாற்றங்களைக் கொண்டு அணுகுதல் (திராவிட மொழிகளுக்கிடையிலான தொடர்பு, பண்பாடுகளுக்கிடையிலான தொடர்பு முதலானவை)
- வரைபடம் உருவாக்குதல்
- மொழிபெயர்ப்பு செய்தல்

நிறுவனத்தின் இச்செயல்பாடுகளுக்குத் தேர்ந்த அறிஞர்களை வரவழைத்துக் குழுவாக இணைந்து செயல்பட்டது. இதற்காக சமஸ்கிருதத்திலும் தமிழிலும் புலமையுடையோரைக் கண்டடைந்து நிறுவனத்தில் பணியமர்த்தியது. பழந்தமிழ் இலக்கியம், இலக்கணம், சைவம், வைணவம், கல்வெட்டு என அந்தந்தத் துறைகளில் பெரும்பங்காற்றிய அறிஞர்களான,

- நீ. கந்தசாமிப் பிள்ளை
- வி.எம். சுப்பிரமணிய ஐயர்
- நீலகண்ட சர்மா
- கரிச்சான் குஞ்சு (கிருஷ்ணசாமி)
- தி.வே. கோபாலையர்
- வரத தேசிகர்

முதலானோர் இங்கு பணிபுரிந்தனர். இந்நிறுவனத்தின் முதல் வெளியீடாகக் காரைக்காலைச் சேர்ந்த காரவேலன் பிரஞ்சு மொழியில் மொழிபெயர்த்த காரைக்காலம்மையாரின் பாடல்கள் இந்நிறுவனத்தின் முதல் இயக்குநரான ஜான் ஃபிலியோசாவால் 1956 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதன் தொடர்ச்சியாக பேரா. பிரான்சுவா குரோ பிரஞ்சு மொழியில் மொழிபெயர்த்த பரிபாடல் (1968), திருக்குறள் காமத்துப்பால், ஜான் ஃபிலியோசா மொழிபெயர்த்த திருமுருகாற்றுப்படை (1973) முதலானவை தொடர்ச்சியாக வெளிவந்தன.

மொழிபெயர்ப்புப் பணிகள் ஒரு பக்கம் தொடர்ச்சியாக வெளிவந்துகொண்டிருந்த சமயத்தில் பழந்தமிழ் இலக்கியங்களுக்கான நோக்கு நூல் தேவை என்பதை உணர்ந்த நிறுவனத்தினர் பழந்தமிழ் இலக்கியங்களுக்கான அடைவு உருவாக்கத்தில் 1960களில் ஈடுபட்டனர். நீ. கந்தசாமி பிள்ளை முதலான ஆய்வறிஞர்கள் குழு இதில் ஈடுபட்டது. செவ்வியல் தமிழ் நூல்கள் என்று இன்று செம்மொழி நிறுவனத்தால் குறிக்கப்பெற்ற 41 நூல்களில் முத்தொள்ளாயிரம் தவிர்ந்த 40 நூல்களுக்கான சொல்லடைவை உருவாக்கினர். இந்நூல்கள் 1967 – 1970 இடைப்பட்ட கலாங்களில் வெளியிடப்பட்டன.

புதுச்சேரி வரலாற்றின் ஒரு பகுதியாக விளங்குகின்ற கல்வெட்டுகளைத் தொகுக்க முடிவு செய்தபொழுது அதற்காகக் கல்வெட்டுத் துறையில் பாரிய பங்களிப்பைச் செய்துகொண்டிருந்த குடந்தை ந. சேதுராமனின் கருத்துகளைப் பெற்றுப் புதுச்சேரியில் கல்வெட்டுத் துறையில் ஆழங்கால்பட்ட புலவர் குப்புசாமியின் தலைமையில் புலவர் வில்லியனூர் ந. வெங்கடேசன், கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் இணைந்து புதுச்சேரியில் இருக்கின்ற கல்வெட்டுகள் அனைத்தையும் தொகுத்தனர். இந்நிலையில் கல்வெட்டுகளை முழுமையாகத் தொகுத்த புலவர் குப்புசாமி இறந்துவிடவே தொகுக்கப்பட்ட கல்வெட்டுகள் அனைத்தும் கல்வெட்டறிஞர் இரா. நாகசாமியின் உதவியுடன் ஒழுங்குபடுத்தப்பட்டன; பேரா. விஜயவேணுகோபால் இதைப் பதிப்பித்தார்.

தேவாரத்திற்குத் தேர்ந்த பதிப்பு இல்லாதிருந்ததைக் கண்ட பேரா. பிரான்சுவா குரோ, தி.வே. கோபாலையர் முதலானோர் இணைந்து குழுவாகச் செயல்பட்டனர். பாடல் பெற்ற கோயில்கள் அனைத்தின் கட்டிடக்கலை, கல்வெட்டுகள், செப்பேடுகள், பிற வரலாற்றுத் தகவல்கள், பல்லவர், பாண்டியர், சோழர் கால வரலாறு, அக்காலத்திய மொழியியல் சூழல், புராணக் கதைகள், தமிழ்ப் பண், திருவாவடுதுறை மற்றும் திருப்பனந்தாள் மடங்களில் மரபாக இசைக்கும் பண்ணமைதிகளின் அடிப்படையிலும் தேவாரப் பதிப்பிற்கான பணிகள் நடைபெற்றன. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரின் பாடல்கள் முதல் இரண்டு பகுதிகளாகவும் தேவாரத்திற்கான சொல்லடைவு மற்றும் ஆராய்ச்சிக் குறிப்புகளைத் தொகுத்து மூன்றாவது பகுதியாகவும் வெளியிடப்பட்டன (பாடல் பெற்ற கோயில் கல்வெட்டுகளுக்கும் தேவாரத்திற்கும் இருக்கின்ற தொடர்பை ஆராய்ந்து நான்காவது பகுதியாக வெளியிட வேண்டுமென்று அதற்கான பணிகள் நடைபெற்றன. எனினும் நான்காவது பகுதி இதுவரை வெளிவரவில்லை).

கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ள இடங்களுக்கான வரைபடத்தை உருவாக்கும் முனைப்பில் தென்னிந்திய வரலாற்று வரைபடம் (Historical Atlas of South India) உருவாக்கும் திட்டத்தை பேரா. சுப்பராயலு தலைமையில் 1996 ஆம் ஆண்டு

தொடங்கப்பட்டது. ஏறத்தாழ பத்தாண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்த பணியில் எண்ணிய முறையில் (Digital version) தென்னிந்தியாவுக்கான வரலாற்று அடிப்படையிலான வரைபடம் உருவாக்கப்பட்டது. வரலாற்றுக் காலம் தொடங்கிக் கல்வெட்டுகளின் துணையுடன் அரசுகளின் அதிகாரத்திற்குட்பட்ட நில எல்லைகளை வரைபடமாக இணையத்தில் இதைப் பதிவேற்றியுள்ளனர். இந்த வரலாற்று வரைபடம் புதிய கண்டுபிடிப்புகளின் பின்னணியில் தொடர்ச்சியாகக் கிடைத்துவருகின்ற தகவல்களின் உதவியுடன் திருத்தியமைக்கப்பட்டும் மாற்றத்திற்குட்பட்டும் வருகின்றது.

தற்காலத் தமிழ்த் திட்டம்

தொடர்ச்சியாகப் பழந்தமிழுக்கான வரலாற்று, இலக்கண, இலக்கிய ஆய்வுகளை மேற்கொண்டிருந்த இந்நிறுவனத்தில் பேரா. குரோ அவர்களின் முன்னெடுப்பில் தற்காலத் தமிழுக்கான திட்டம் உருவானது. தற்காலத் தமிழுக்கான ஆராய்ச்சியாளராக திரு. கண்ணன்.எம் 1991 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். தற்காலத் தமிழில் எந்தெந்த விஷயங்களை முன்னெடுப்பது என்னும்பொழுது கீழ்க்கண்ட பன்முகப்பட்ட அணுகுதலைக் கொண்டிருப்பதாக இருக்க வேண்டும் என்று முடிவுசெய்தனர். 19, 20, 21 ஆம் நூற்றாண்டுகளுக்கான முழுமையான ஆதாரமாகவும் ஆராய்ச்சிக்குரிய வளமாகவும் இத்திட்டம் இருக்க வேண்டும் என்னும் முனைப்பில் தற்கால இலக்கியத்திற்கான முழுமையான நூலகமாக இந்நிறுவன நூலகம் விளங்குகின்றது.

- வட்டார வழக்கு இலக்கியங்கள்
- உள்ளூர் வரலாறு
- தலித் இலக்கியம்
- புலம்பெயர்ந்தோர் இலக்கியம்
- வரலாற்று இலக்கியம்; வரலாற்று ஆவணம்
- உழைப்பிற்கும் இலக்கியத்திற்குமான தொடர்பு
- வாசிப்பு என்னும் அனுபவத்திற்கும் சமுகத்திற்கான தொடர்பு
- ஈழத் தமிழ் இலக்கியம்
- செம்மொழித் தமிழ் – தற்காலத் தமிழுக்கான உறவு
- மொழிபெயர்ப்பு
- நாட்டார் இலக்கியம்
- நாட்டார் இசை
- இருப்பிட வாழ்வியலை வெளிப்படுத்தும் கட்டிடக் கலை
- மொழி, அரசியல், அமைப்புகள்
- கோட்பாட்டு ஆய்வு வளர்ச்சி
- மேற்குலக நாடுகளில் உருவாக்கப்படுகின்ற புதிய கோட்பாடுகளை முன்னெடுத்தல்

முதலான அனைத்தையும் உள்ளடக்கியதாக ஒருங்கிணைந்த தற்காலத் தமிழ் இலக்கிய ஆய்வு இங்கு முன்னெடுக்கப்படுகின்றது. அமெரிக்கா, கனடா, பிரான்சு, பெல்ஜியம் ஆகிய நாடுகளில் உள்ள பேராசிரியர்கள், மாணவர்கள், இந்தியாவில் உள்ள பல்கலைக்கழகங்களில் பணிபுரியும் பேராசிரியர்கள், மாணவர்களுடன் இணைந்து தொடர்ந்து பணியாற்றிவருகின்றது. பேராசிரியர்களான டேவிட் பக்,

எலிசபெத் சேதுபதி, ஜார்ஜ் ஹார்ட், பிரான்சுவா குரோ முதலானவர்களின் ஆய்வு நூல்கள், மொழிபெயர்ப்புகள்; அமெரிக்கப் பல்கலைக்கழகங்களோடு இணைந்து குறிப்பிட்ட துறைசார்ந்த முக்கிய கட்டுரைகள் அடங்கிய தொகுப்பு நூல்கள் முதலானவை இத்திட்டத்தின் வாயிலாக வெளியிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு இலக்கியச் செயல்பாட்டிற்குப் பின்னும் ஒளிந்துகொண்டு இருக்கின்ற சமூகக் காரணி, பண்பாட்டு ஊடாட்டம், மொழி, சாதி, இசை, வரலாறு என இன்ன பிற அனைத்தின் வெளிப்பாடாக எந்தவிதமான ஒளிவுமறைவும் இன்றி ஆராய்ச்சி செய்யப்பட வேண்டும் எனும் நோக்கத்தோடு பாண்டிச்சேரி பிரஞ்சு ஆய்வு நிறுவனம் இயங்கிக்கொண்டு இருக்கிறது. தொடர்ச்சியாக வெளிநாட்டினருக்குத் தமிழ் மொழி, இலக்கியம், இலக்கணம் முதலானவற்றைக் கற்றுத் தருகின்றது.

பார்வை நூல்கள்:

1. பாண்டிச்சேரி பிரஞ்சு ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்ட நூல்கள் (1956 – 2020)
2. வேங்கடாசலபதி, ஆ.இரா., (2018); உ.வே.சாமிந்தையர் கடிதக் கருவூலம் தொகுதி 1 (1877 – 1900)', சென்னை: டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், முதல் பதிப்பு.
3. French Institute of Pondicherry publications (1956 – 2020)
4. Venkatachalapathy, A.R., (2018); U.Ve. Caminathaiyar Kadithak karuvoolam Vol. I (1877-1900), Chennai: taktar U.Ve. Caminathaiyar Nool Nilayam, Frist edition.

பின்னிணைப்பு

S.No.	Author/Editor	Title	Lang.	Vol.	year	pages	Pub.	Notes
1	R. Dessigane, P.Z. Pattabiramin, J. Filliozat	La legende des jeux de Civa a Madurai, d'apres les textes et les peintures	French	---	1960	xvi,130, 50 plates	IFP	சைவ புராண, ஓவியங்களின் பின்னணியில் மதுரை பற்றிய ஆய்வு நூல்
2	R. Dessigane, P.Z. Pattabiramin, Jean Filliozat	Les legendes civaites de Kanchipuram	French	---	1964	xviii, 152, 1 map, 49 plates	IFP	சைவ புராணங்களின் பின்னணியில் காஞ்சிபுரம் பற்றிய ஆய்வு நூல்
3	J. Filliozat, P.Z. Pattibiramin	Parures divines du Sud de l'Inde	French	---	1966	31, 126 plates	IFP	தென்னிந்திய தெய்வ வடிவங்கள் குறித்த பிரஞ்சு மொழியில் எழுதப்பட்ட ஆய்வு நூல்
4	R. Dessigane, P.Z. Pattabiramin	La legende de Skanda selon le Kandapuranam tamoul et l'iconographie	French	---	1967	iii, 288, 56 photos	IFP	கந்தபுராணப் பின்னணியில் முருகனின் கலைச் சிற்ப வடிவங்கள் பற்றிய ஆய்வு நூல்
5	Marguerite E. Adiceam	Contribution a l'etude d'Aiyanar-Sasta	French	---	1967	viii, 133, 3 pl., 38 photos	IFP	அய்யனார், சாஸ்தா குறித்த கதைகள், சிற்பங்கள், வழக்காறுகள் பற்றிய ஆய்வு நூல்
6	---	பழந்தமிழ் நூற் சொல்லடைவு	Tamil	Vol. I - III	1967, 1968, 1970	1-414, 415-824,	IFP	பழந்தமிழ் நூல்களுக்கான சொல்லடைவு

						825-1491		
7	Francois Gros	Le Paripatal. Texte tamoul.	Tamil, French	---	1968	lxiii, 322	IFP	பிரஞ்சு மொழியில் பரிபாடல் மொழிபெயர்ப்பு
8	Francois Gros, R. Nagaswamy, K. Srinivasacharya	Uttaramerur. Legendes, histoire, monuments	French, Sanskrit	---	1970	136, 72, vii, xvi photos	IFP	உத்திரமேரூர் கோயில் கல்வெட்டுகள், வரலாறு, சின்னம், ஓவியம், கதை, கட்டிடம் பற்றிய ஆய்வு
9	P.Z. Pattabiramin	Sanctuaires rupestres de l'Inde du sud	French	Vol. I, II	1971, 1975	19, 68 plates; 82, 203 plates	IFP	தென்னிந்தியாவில் சத்திரங்களின் இருப்பு பற்றிய மானிடவியல், கட்டிடவியல் ஆய்வு
10	Jean Filliozat	Un texte tamoul de devotion vishnouite. Le Tiruppavai d'Antal	Tamil, French	---	1972	xxviii, 139, 35 photos	IFP	பிரஞ்சு மொழியில் ஆண்டாளின் திருப்பாவை மொழிபெயர்ப்பு
11	Jean Filliozat	Un texte de la religion Kaumara. Le Tirumurukarruppatai	Tamil, French	---	1973	xlvi, 131	IFP	பிரஞ்சு மொழியில் திருமுருகாற்றுப்படை மொழிபெயர்ப்பு
12	Vasundhara Filliozat	Le temple de Tirumankaiyalvar a Hampi	French	---	1976	42, 20 plates	IFP	ஹம்பியில் இருக்கும் திருமங்கையாழ்வார் கோயிலைக் கட்டிடம், ஓவியம், சிற்பம் முதலானவற்றின் பின்னணியில் அணுகிய நூல்
13	Francoise L'Hernault	L'iconographie de Subrahmanya au Tamilnad	French	---	1978	274, 246 photos, maps	IFP	சிற்பக் கலையின் அடிப்படையில் சுப்பிரமணியக் கடவுளின் சிற்பங்களை அணுகிய நூல்
14	Karavelane	Chants devotionnels tamouls de Karaikkalammaiyar	Tamil, French	---	1982 (ed.I. 1956)	171, 16 plates	IFP	காரைக்காலம்மையாரின் பாடல்கள் காரைக்காலைச் சேர்ந்த காரவேலன் அவர்களால் பிரஞ்சு மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. இரு மொழிப் பதிப்பு
15	T.V. Gopal Iyer, Francois Gros	தேவாரம்	Tamil, French	Vol. I - III	1984, 1985, 1991	ccxxv, 431; xviii, 579; 703	IFP	இசை, யாப்பு, அடைவு, கல்வெட்டு, புராணம், கோயில் கட்டிடக் கலை, ஆராய்ச்சி அடிப்படையில் தேவாரம் பதிப்பு
16	Achille Bedier, Joseph Cordier, Jean Deloche	Statisques de Pondichery (1822 - 1824)	French	---	1988	398, 1 map	IFP	புதுச்சேரியின் வரலாற்றில் 19ஆம் நூற்றாண்டு ஆவணம்
17	P.R. Srinivasan, Marie-Louise Reiniche	Tiruvannamalai, a Saiva sacred comples of South India	English, Tamil	Vol. I, II	1990	440; 405 - 771	IFP	திருவண்ணாமலைக் கோயில் கல்வெட்டுகள், வரலாறு, கதைகள், சிற்பங்கள், கட்டிடக் கலை பற்றிய முழுமையான ஆய்வு
18	Ulrike Niklas	அமிதசாகரர் இயற்றிய யாப்பருங்கலக்காரிகை, குணசாகரர் இயற்றிய உரையுடன்	Tamil, English	---	1993	xvii, 467	IFP	யாப்பருங்கலக்காரிகை உரையுடன் ஆங்கில மொழிபெயர்ப்பு
19	ரொபேர் துய்லோ	நகரமும் வீடும்: வாழுமிடத்தின் உணர்வுகள்	Tamil	---	1993	61, 87 photos	IFP	புதுச்சேரியில் இருக்கின்ற வீடுகளின் அமைப்பைக் கட்டிடக் கலை பின்னணியில் ஆராயும் நூல்

20	Jean-Luc Chevvillard	தொல்காப்பியச் சொல்லதிகாரச் சேனாவரையர் உரை	French, Tamil & English , French	Vol. I, II	1996, 2008	637, 526	IFP/EFEO	தொல்காப்பியச் சொல்லதிகாரச் சேனாவரையர் உரை மூலமும் உரையும் பிரஞ்சு மொழியில் மொழிபெயர்ப்பு
21	Hanne M. de Bruin	கர்ணமோக்ஷம்	Tamil, English	---	1998	xxxvi, 260	IFP/EFEO/IIAS	கர்ணமோக்ஷம் நாட்டார் பாடல் பிரஞ்சு மொழிபெயர்ப்பு
22	Jean-Claude Bonnan	Jugements du tribunal de la Chaudrie de Pondichery 1766 - 1817	French	Vol. I, II	1999	lxix, 967	IFP	பிரஞ்சு காலனிய காலத்தில் கோர்ட்டுத் தீர்ப்புகளின் தொகுப்பு
23	Jean Deloche	Senji. Ville fortifiee du pays tamoul	French, English	---	2000	392, x maps	EFEO /IFP	வரலாற்றில் செஞ்சிக் கோட்டை பற்றிய முழுமையான ஆவணம்
24	Francois Gros, Kannan M.	L'arbre nagalinga. Nouvelles d'Inde du Sud	French	---	2002	276	IFP	தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்ச் சிறுகதைகள் பிரஞ்சு மொழிபெயர்ப்பு
25	Robert Dulau	The Palatial houses in the South India	French, English	---	2002	128	IFP	கட்டிடவியல் அடிப்படையில் காரைக்குடி செட்டியார்களின் வீடு பற்றிய ஆய்வு நூல்
26	Jean-Luc Chevvillard, Eva Wilden, A. Murugaiyan	South Indian Horizons. Felicitation volume for Francois Gros on the occasion of his 70th birthday	French, English , Tamil	---	2004	xlv, 651	IFP/EFEO	பிரான்சுவா குரோ அவர்களின் தமிழியல் ஆய்வுப் பங்களிப்பைப் பாராட்டும் விதமாகத் தமிழியல் ஆய்வுக்கட்டுரைகளின் தொகுப்பு
27	Kannan M.	தலித் இலக்கியம்: எனது அனுபவம்	Tamil	---	2004	200	IFP/Vitiyal patippakam	தலித் இலக்கியம் குறித்த பல்வேறு தலித் அறிஞர்களின் கட்டுரைகள்
28	T.V. Gopal Iyer	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	Tamil	---	2005	lxxxiii, 369	IFP/EFEO	மாறனகப்பொருள் பதிப்பும் அதன் பின்னனணியில் திருப்பதிக்கோவை ஆராய்ச்சியும்
29	Jean Deloche	Le vieux Pondichery (1673 - 1824) revisite d'apres les plans anciens	French	---	2005	viii, 160	IFP/EFEO	பிரஞ்சு காலனி ஆதிக்கத்தில் அவர்கள் பின்பற்றிய நகர அமைப்பின் அடிப்படையில் பழைய புதுச்சேரி
30	Kannan M., Carlos Mena	Negotiations with the past: classical Tamil in contemporary Tamil	English , Tamil	---	2006	lxxiv, 478	IFP/ UofCalifornia	தற்காலத் தமிழ் இலக்கியத்தை வளப்படுத்தவும் செம்மொழிக்கால இலக்கியத்தில் தொடர்ச்சியைக் காணவும் தேவையான அணுகுமுறைகளை ஆராயும் நூல்
31	Bahour S. Kuppusamy, G. Vijayavenugopal	புதுச்சேரி மாநிலக் கல்வெட்டுக்கள்	Tamil, English	Vol. I, II	2006, 2010	xxvii, lix, 537; cxlviii, 379	IFP/EFEO	புதுச்சேரி பகுதியில் கிடைத்துள்ள கல்வெட்டுகள் அனைத்தையும் ஒருசேரத் தொகுத்து ஆராய்ந்துள்ள நூல் தொகுப்பு
32	V.M. Subramanya Aiyar, Jean-Luc	Digital Tevaram [CD-ROM]	English , Tamil	---	2007	---	IFP/EFEO	தேவாரம் இசைக் குறிப்புகள், சிற்பங்கள் உள்ளடக்கிய இசைத் தட்டு

	Chevillard, S.A.S. Sarma							
33	Jean Deloche	Studies on fortification in India	English	---	2007	267, 70 plans	IFP/EFEO	இந்தியாவில் கோட்டைகள், அவற்றின் தன்மை, கலையம்சம் குறித்த ஆவணம்
34	Karine Ladrech	Darasuram: architecture and iconography [CD-ROM]	English	---	2007	---	IFP/EFEO	தாராசுரம் கோயிலிலுள்ள சிற்ப, கட்டிடக்கலைகள் குறித்த முழுமையான ஆவணம்
35	Kannan M.	Streams of language: dialects in Tamil	Tamil, English, French	---	2008	xxii, 335	IFP	பிரஞ்சு, ஆங்கிலம், தமிழில் வட்டாரத் தமிழ் குறித்த கட்டுரைத் தொகுப்பு
36	N. Kandasamy Pillai	Narrinai: text and translation	Tamil, English	---	2008	xxxii, 284	IFP	நற்றிணையின் ஆங்கில மொழிபெயர்ப்பு
37	Eva Wilden	Between preservation and recreation: Tamil traditions of commentary. Proceedings of a workshop in honour of T.V. Gopal Iyer	Tamil, English	---	2009	xiv, 320	IFP/EFEO	தி.வே. கோபாலையரின் பங்களிப்பைப் பாராட்டும்விதமாக இலக்கணம், உரை குறித்த கட்டுரைகளின் தொகுப்பு
38	Francois Gros, M.P. Boseman, Kannan M., Jennifer Clare	Deep Rivers: selected writings on Tamil literature	English	---	2009	xxxviii, 520	IFP/UofCalifornia	பேரா. பிரான்சுவா குரோ அவர்கள் பிரஞ்சு மொழியில் எழுதிய முன்னுரைகள், கட்டுரைகள் முதலியவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்பு
39	Kannan M., Jennifer Clare	Passages: relationship between Tamil and Sanskrit	English	---	2009	423	IFP/UofCalifornia	தமிழ் சமஸ்கிருத உறவு குறித்த பல்வேறு கருத்துகள் அடங்கிய கட்டுரைத் தொகுப்பு
40	Jean Deloche	Four forts of the Deccan	English	---	2009	206	IFP/EFEO	தென்னிந்தியாவில் இருக்கின்ற தௌலதாபாத், முடுகல், கண்டிகொடா, குட்டி ஆகிய நான்கு கோட்டைகள் பற்றிய ஆய்வு நூல்
41	David C. Buck, Kannan M.	Tamil Dalit literature: my own experience	English	---	2011	xxxviii, 158	IFP/North central education foundation	9 தலித் அறிஞர்களின் தலித் இலக்கியம் பற்றிய கட்டுரைத் தொகுப்பு
42	Jean Deloche	A study in Nayaka-period social life: Tiruppudaimarudur paintings and carvings	English	---	2011	xi, 137	IFP/EFEO	திருப்புடைமருதூர் கோயிலில் உள்ள ஓவியங்கள், சிற்பங்கள்வழி நாயக்கர் கால மக்களின் சமூக வாழ்க்கையை ஆராயும் நூல்

43	Will Sweetman, R. Ilakkuvan	Bibliotheca Malabarica: Bartholomaus Ziegenbalg's Tamil library	English	---	2012	153	IFP/EFEO	சீகன்பால்கு அவர்களின் நூலக அட்டவணை
44	Francois Gros, Elisabeth Sethupathy	Le vagabond et son onmre: G. Nagarajan: romans et recits tamouls	French	---	2013	267	IFP	ஜி. நாகராஜனின் சிறுகதைகள் பிரஞ்சு மொழிபெயர்ப்பு
45	Whitney Cox, Vincenzo Vergiani	Bilingual discourse and cross-Cultural Fertilisation: Sanskrit and Tamil in Medieval India	English	---	2013	x, 466	IFP/EFEO	பண்பாட்டுப் பின்னணியில் மத்திய கால இந்தியாவில் தமிழ் சமஸ்கிருத உறவு பற்றிய கட்டுரைகளின் தொகுப்பு
46	Jean Deloche	Ancient fortifications in the Tamil coutry as recorded in eighteenth century French plans	English	---	2013	viii, 139	IFP/EFEO	பிரஞ்சுக்காரர்களின் 18ஆம் நூற். ஆவணத்தின் அடிப்படையில் தமிழகத்தில் இருக்கும் கோட்டைகளின் அமைப்பை ஆராயும் நூல்
47	Jean Deloche	Old Mahe (1721 - 1817) according to eighteenth century French plans	English	---	2013	39	IFP/EFEO	பிரஞ்சு ஆதிக்கத்தின்கீழ் மாஹே பகுதியில் இருந்த கட்டிடக் கலை அமைப்பை ஆராயும் நூல்
48	Francois Gros	Vadivacal: des taureaux et des hommes en pays tamoul	French	---	2014	viii, 113	IFP	சி.சு. செல்லப்பாவின் வாடிவாசல் பிரஞ்சு மொழிபெயர்ப்பு
49	Valerie Gillet	Mapping the chronology of Bhakti: milestones, stepping stones and stumbling stones. Proceedings of a workshop held in honour of Pandit R. Varadadesikan	English	---	2014	381	IFP/EFEO	சைவ, வைணவ சமயங்களில் பக்தியின் வளர்ச்சி வரலாற்றை 11 கட்டுரைகளின் வழி அணுகிய நூல்
50	Emmanuel Francis, Charlotte Schmid	The Archaeology of Bhakti I: Mathura and Maturai, Back and Forth	English	---	2014	xiii, 366	IFP/EFEO	வரலாற்றுப் போக்கில் பக்தியின் இடத்தைக் கல்வெட்டுகள், ஓவியங்கள், இலக்கியங்கள், வாய்மொழிக் கதைகள் முதலியவற்றின் பின்னணியில் ஆராய்ந்த நூல்
51	Jean Deloche	contribution to the history of the Wheeled vehicle in India	English	---	2014	xiii, 145, 36 plates	IFP/EFEO	மாட்டுவண்டிச் சக்கரத்தின் வளர்ச்சிப் பின்னணியில் இந்திய வரலாற்றை அணுகிய நூல்
52	Kannan M., Rebecca Whittington, David C. Buck, D. Senthil Babu	Time will write a song for you: Contemporary Tamil writing from Sri Lanka	English	---	2014	xxx, 273	IFP/Penguin books	இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகளின் ஆங்கில மொழிபெயர்ப்பு

53	George L. Hart	Four Hundred Songs of Love. An Anthology of Poems from Classical Tamil. The Akananuru	English	---	2015	xx, 485	IFP	அகநானூற்றுக்கான ஆங்கில மொழிபெயர்ப்பு
54	Emmanuel Francis, Charlotte Schmid	The Archaeology of Bhakti II: Royal Bhakti, Loval Bhakti	English	---	2016	ix, 609	IFP/EFEO	பக்தியின் தொல்லியல் என்னும் பொருண்மையில் பெருந்தெய்வ, மக்களின் வழிபாட்டுக் கடவுள்களின் மூலம் பக்தியின் வளர்ச்சி வரலாற்றை வெளிப்படுத்தும் நூல்
55	Gopinath Sricandane	Shadows of Gods: An archive and its images	English	---	2016	84	IFP/EFEO	தமிழ்நாட்டிலிருந்து கடத்தப்பட்ட சிற்பங்கள், அதன் பின்னணி, வரலாற்று முக்கியத்துவம் குறித்து இந்நிறுவனத்தில் உள்ள ஆவணக் காப்பகத்தின் உதவியுடன் எழுதப்பட்ட நூல்
56	David C. Buck, K. Paramasivam	The Study of Stolen Love. Iraiyanar Kalaviyal with commentary by Nakkiranar (rev. ed.)	English	---	2017	xxxv, 347	IFP	இறையனார் அகப்பொருள் உரையுடன் ஆங்கில மொழிபெயர்ப்பு
57	Elisabeth Sethupathy	Gopalla Gramam ou le village de Gopallam	Tamil, French	---	2017	267	IFP	கி. ராஜநாராயணனின் கோபல்ல கிராமம் பிரஞ்சு மொழிபெயர்ப்பு
58	Eva Wilden	A critical edition and an annotated translation of the Akananuru (part 1 - Kalirriyanainirai)	Tamil, English	Vol. I - III	2018	cxlix, 323; 324 - 787; 1 - 470	EFEO /IFP	அகநானூறு பதிப்பு மற்றும் மொழிபெயர்ப்பு
59	Suganya Anandakichenin	My sapphire-hued Lord, mu Beloved! A complete annotated translation of Kulacekara Alvar's Perumal Tirumoli and of its medieval Manipravala commentary by Periyavaccan Pillai	Tamil, English	---	2018	xi, 604	EFEO /IFP	குலசேகராழ்வாரின் பெருமாள் திருமொழி பெரியவாச்சான் பிள்ளை உரையுடன் ஆங்கில மொழிபெயர்ப்பு
60	Eva Wilden	A grammar of old Tamil for students	Tamil, English	---	2018	226	EFEO /IFP	பழந்தமிழ் இலக்கணம்: ஆங்கில வழியில் தமிழ் கற்கும் மாணவர்களுக்கான எளிய நூல்
61	Nalini Balbir, Karine Ladrech, N. Murugesan, K. Rameshkumar	Jain sites of Tamil Nadu [DVD]	English	---	2018	---	IFP	தமிழ்நாட்டில் இருக்கின்ற சமணக் குகைகளின், கோயில்களின் தொகுப்பாக, வரலாற்றுக் குறிப்புகளுடன் உருவாக்கப்பட்டுள்ளது
62	Alexandra de Heering	Speak, Memory. Oral histories of Kodaikanal Dalits	English	---	2018	xxi, 401	IFP	கொடைக்கானலில் வாழும் தலித் மக்களின் வாழ்வியல் சூழலைக் கள ஆய்வின் மூலமும் அவர்களது நினைவுகளின் வழியாகவும் பயணித்து எழுதப்பட்ட நூல்

63	Lynn Ate	Experiments in literature: Tirumankai Alvar's five shorter works. Annotated translations with glossary	Tamil, English	---	2019	ix, 433	EFEO /IFP	திருமங்கையாழ்வாரின் படைப்புகள் ஆங்கில மொழிபெயர்ப்பு
64	Jean Deloche	Pondicherry past and present [CD-ROM]	English , French	---	2019 (ed. 2007)	---	IFP/E FEO	வரலாற்றில் புதுச்சேரியின் பழமையையும் அதன் வளர்ச்சியையும் பதிவு செய்துள்ள ஆவணம்
65	Suganya Anandakichenin , Victor D'Avella	The commentary idioms of the Tamil learned traditions	English , Tamil	---	2020	iv, 603	IFP/E FEO	தென்னிந்தியாவின் வளமான உரை மரபை நுணுகி ஆராயும் கட்டுரைகளின் தொகுப்பு

***

மதிப்பிடப்பெற்றது

இலங்கை முஸ்லிம் கிராமியப் பெண்களின் துன்பியல் 'கவி'கள்: சமூக, உளவியல் நோக்கு

Tragic 'Kavi' of Sri Lankan Muslim Village Womens: Social and Psychological view

கலாநிதி சி. சந்திரசேகரம்/ Dr.S.Santhirasegaram[3]

Abstract

'Kavi' is the one kind of folk Songs of Eastern Sri Lankan Muslims. Most of the Kavis were sung by women. Specially it is a tradition in Muslim community when the women face the problems and tragedies, they create and sing as Kavis and convey them to the persons who cause the problems. The women conduct this type of ritual communication when they abandoned by men, neglected by their children, separated from their children and being childlessness. Due to written by affected women, their mood is exposed in these Kavis.

They have fabricated and sung the Kavis as a way of relief from life issues which they faced. They are trying to get mental comfort through fabricating their tragedies as Kavi and singing in solitude or send those Kavis to the persons who cause the tragedies. The purposes of this communication were sharing the tragedies with others, get mental comfort by sharing and solve the conflict.

Keywords: Kavi, Ritual communication, Tragic, Tradition

அறிமுகம்

கவி என்னும் சொல் பாடல் அல்லது கவிதைகள் அனைத்தையும் குறிக்கும் ஒரு பொதுச் சொல்லாக இருப்பினும், கிழக்கிலங்கை முஸ்லிம்களின் கிராமியப் பாடல் வகைகளில் ஒன்றைக் குறிக்கும் சிறப்புச் சொல்லாக வழங்குகிறது. இக்கவிகளில் கணிசமானவை காதல் சார்ந்தவையாகும். இதன் காரணமாகப் பலரும் கவியைக் காதலை வெளிப்படுத்தும் பாடல்வடிவமாகக் கருதி வந்துள்ளனர். ஆயினும், கிழக்கிலங்கை முஸ்லிம்கள் மத்தியிலே காதல் சாராத பொருளை உள்ளடக்கமாகக் கொண்ட ஏராளமான கவிகள் வழக்கில் உள்ளன. அந்த அடிப்படையில் அது பொருள் அடிப்படையிலன்றி வடிவ அடிப்படையிலேயே ஏனைய பாடல் வகைகளில் இருந்து வேறுபடுகிறது என்பார் எம். ஏ. நுஃமான் (1980: 131).

நான்கு வரிகளைக் கொண்ட கவி, ஈரடிக் கண்ணி அமைப்புடையது. அதாவது, ஈரடி இசையமைப்பு வாய்பாட்டைக் கொண்டது. கவிகள் உயர் தொனியுடன் பாடப்படுபவை. அவை பெரும்பாலும் கூற்றுமுறையாகவும் மாறுந்தரமாகவும் அமைவன, உரையாடல் தன்மையில் வருவன.

[3]தலைவர், மொழித்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை. santhirasegaramsinnathamby@yahoo.com

கவிகளின் வடிவ இறுக்கம், உள்ளுறைப் படிமம், குறியீட்டுத் தன்மை, இதமான இசைப்பண்பு முதலான சிறப்புக்கள் காரணமாக உணர்வுகளை உருக்கமாகவும் ஆழமாகவும் புலப்படுத்துவதற்குச் சிறந்ததொரு வடிவமாகக் கவி வடிவம் கையாளப்பட்டு வந்துள்ளது. குறிப்பாக, பிற்காலத்திலே சற்று எழுத்தறிவுள்ள முஸ்லிம் கிராமிய மக்கள் சமூக நிகழ்வுகள், பிரச்சினைகள் பற்றிப் பாடுவதற்குக் கவி வடிவத்தைக் கையாண்டுள்ளனர். அதிலும் குறிப்பாக இத்தகைய கவிகள் பெண்களால் அதிகம் பாடப்பட்டுள்ளன என்பது கள ஆய்வின்மூலம் அறியப்பட்டது.

ஆய்வுச் சிக்கல்

கவிகள் பாவனையான காதல் உணர்வுகளைக் கூறுவன, பெரும்பாலும் ஆண்களால் பாடப்பட்டவை என்பது பொதுவான கருத்தாகும். கவி வடிவம் ஒரு மகிழ்வளிப்புக்கான வடிவமாகவே நோக்கப்பட்டு வந்துள்ளது. ஆனால் இக்கவிகளில் ஒரு பகுதி பாவனையற்ற வகையில் சொந்தப் பிரச்சினைகளை வெளிப்படுத்துகின்ற – அவற்றிற்கு முகங்கொடுத்த பெண்களால் பாடப்பட்டவையாக உள்ளன. அந்தக் கவிகள் ஊடாகத் தொடர்பாடல் கொள்ளும் மரபொன்று இருந்து வந்திருக்கின்றது. ஆயினும், இந்தப் பண்பாட்டு மரபு மறைக்கப்பட்டுள்ளது.

ஆய்வு நோக்கம்

கிழக்கிலங்கை முஸ்லிம் பெண்கள் தமது சொந்த வாழ்வில் அனுபவித்த பிரச்சினைகள், துயரங்களில் இருந்து விடுபடுவதற்கு அல்லது மன அழுத்தங்களைப் போக்குவதற்குக் கவிகளை எவ்வாறு ஊடகமாகப் பயன்படுத்தினர் என்பதையும் சமூகத்திலே பெண்கள் எத்தகைய பிரச்சினைகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் முகம்கொடுத்து வந்துள்ளனர் என்பதையும் வெளிப்படுத்துவது இவ்வாய்வின் நோக்கமாகும்.

ஆய்வுப் பெறுபேறுகளும் முடிவுகளும்

பெண்கள் தமக்குக் குடும்பத்தில் பிரச்சினைகள், வேதனைகள் ஏற்படுமிடத்து அவற்றைக் கவிகளாக எழுதிப் படிப்பதும் அப்பிரச்சினைகளுக்குக் காரணமானவர்களுக்கு அவற்றைத் தெரியப்படுத்துவதும் முஸ்லிம் சமூகத்தவர் மத்தியில் ஒரு மரபாக உள்ளது. ஆண்களால் கைவிடப்படுதல், பிள்ளைகளால் புறக்கணிக்கப்படுதல், பிள்ளைப்பேறின்மை, பிள்ளைகளைப் பிரிந்திருத்தல் முதலான பல்வேறு பிரச்சினைகளுக்கு இப்பெண்கள் முகம்கொடுக்கின்றபோது இத்தகைய சடங்கியல் தொடர்பாடலை மேற்கொள்கின்றனர். இந்தப் பாடல்கள் பெரும்பாலும் பாதிக்கப்பட்ட பெண்களால் எழுதப்பட்டவையாக உள்ளதால் இவற்றில் அவர்களின் இயல்பான மனநிலை வெளிப்படுவதைக் காணலாம். இக்கவிகள் தாளில் எழுதப்பட்டு அல்லது ஒலிப்பதிவு செய்யப்பட்டு உரியவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இது தம் துன்ப உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கான தொடர்பாடல் முறையாகப் பயன்படுகின்றது.

கிழக்கிலங்கை முஸ்லிம் பெண்கள் மத்தியில் இத்தகைய 'கவித்தொடர்பாடல் முறை' நிலவுவதைப் பின்வரும் கூற்று எடுத்துக்காட்டுகின்றது.

> *பெண்கள் தங்கள் சொந்தத் துயரங்களையும் குடும்ப நெரிசல்களையும் அன்றாட வாழ்க்கையில் எதிர்கொள்ளும் நிகழ்ச்சிகளையும் கவிகளாகப் பாடும் இயல்பினர்... தனது துன்பத்தை வெளியேற்றும் ஊடகமாகக் கவி அவளுக்குப் பயன்படுகின்றது. சற்று எழுத்தறிவுள்ள சில பெண்கள் தம் துயரங்களைக் கவியாக எழுதி அதற்குக் காரணமாக இருந்தவர்களுக்கு அனுப்பும் வழக்கமும் உண்டு. சமீபத்தில் இத்தகைய ஒரு கவிப்பிரதி எனக்குக் கிடைத்தது* (நுஃமான், எம்.ஏ., 1980:136–38).

எம்.ஏ.நுஃமானின் இக்கூற்று மூலம் பெண்கள் தமது சொந்தத் துயரங்களையும் பிரச்சினைகளையும் கவியாக இயற்றிப் பாடுவதன் மூலமும் துயரத்திற்குக் காரணமானவருக்குத் தெரியப்படுத்துவதன் மூலமும் தமது துயரங்களை வெளியேற்றி ஆறுதல் காண முனைகின்றனர் என்பதை அறிய முடிகின்றது. இக்கவிகளை அவர்கள் தம்முடன் நெருங்கியவர்களிடமும் குடும்ப உறுப்பினர்களிடமும் பாடிக் காட்டுகின்றனர். எனவே, இக்கவிகள் ஒரு தொடர்பாடல் ஊடகம் என்ற வகையில் செயற்படுகின்றன. சற்று எழுத்தறிவுள்ள கிராமியப் பெண்கள் தமது உண்மையான துன்ப உணர்வுகளை உருக்கமாகவும் ஆழமாகவும் வெளிப்படுத்துவதற்கு ஏற்ற வடிவமாகக் கவியை அவர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

அந்தவகையில், பெண்கள் எதிர்நோக்கும் குடும்பம் சார்ந்த பிரச்சினைகளில் ஆண்களால் கைவிடப்படுதல் அல்லது ஏமாற்றப்படுதல் என்பது முக்கியமானதாகும். இவ்வாறான பிரச்சினைகள் கிராமியப் பெண்களுக்கு ஏற்படுகின்றபோது அவர்கள் சட்ட நடவடிக்கைகளை நாடுவது மிகவும் குறைவாகும். மாறாகத் தம் வேதனைகளை அடக்கிக்கொண்டு வீட்டினுள்ளே நடைப்பிணங்களாக வாழ்கின்றனர். இத்தகைய சில முஸ்லிம் கிராமியப் பெண்கள் தம் வேதனைகளைப் பாடல்களாக எழுதிப் பாடுவதும், பிரச்சினைக்குக் காரணமானவருக்கு அனுப்புவதும் வழக்கமாக உள்ளது. கணவனால் கைவிடப்பட்ட அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஓர் இளம்பெண்ணால் பாடப்பட்டதாக எம்.ஏ.நுஃமான் குறிப்பிடும் கவித்தொகுதி இத்தகைய சடங்கியல்சார் கவித் தொடர்பாடலுக்குச் சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும். 196 கவிகளைக் கொண்ட இக்கவித்தொகுதியில் இருந்து சில கவிகளையும் அவர் குறிப்பிட்டுள்ளார் (1980: 136–37):

> *"கரைவாகைச் சேர்ந்த ஒரு மீனவனைக் கலியாணம் செய்து அவனுடன் பத்து ஆண்டுகள் வாழ்க்கை நடத்தி – பின்னர் மலடி என்று கூறி அவனால் கைவிடப்பட்ட அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஒரு இளம்பெண் தனது துயரங்களை கணவனின் உறவினர்களுக்கு கவிகள் மூலம் அதில் தெரியப்படுத்துகின்றாள்"* (மேலது, 136).

எனக் கூறுகின்றார். இக்கவிகள் கணவன் தனக்குச் செய்த துரோகத்தையும் கொடுமைகளையும் அது தொடர்பான துயரத்தையும் கணவனின் உறவினர்களிடம் சொல்லி ஏங்குவனவாக உள்ளன.

'நன்றி மறந்தார் நகமிருக்கச் சதையெடுத்தார்
கழுத்திலையும் கத்தி வைத்தார் – இனிஓர் காலமும் தான் பேச்சிருக்கோ'

'மலடி என்று சொல்லி வசை பேசிப் போட்டாரு
படைத்த றகுமான் மாமி–என்னைப் பதராக்கிப் போட்டாராக்கும்'

கணவன் தனக்குச் செய்த பல்வேறு கொடுமைகளால் அடைந்த வேதனைகளை உருக்கமாக வெளிப்படுத்துவதோடு அவன் மீதுள்ள தீரா வெறுப்பையும் பாடுகிறார். இக்கவிகள் அப்பெண்ணின் உள்ளக் குமுறல்களின் வெளிப்பாடாகவே அமைகின்றன. தான் மலடியாய்ப் போனதை எண்ணி ஏங்குகிறார்; அவ்வாறு தன்னைப் படைத்துவிட்ட கடவுளை நொந்துகொள்கின்றார். பதர் என்ற சொல் மூலம் வீட்டிற்கும் சமூகத்துக்கும் பயனற்றவளாக இறைவன் தன்னைப் படைத்துவிட்டார் என்று மனக்குமுறல் உறுகின்றார்.

இதற்கும் மேலாக இத்தகைய நிலை சமூகத்தின் வசைப் பேச்சுக்கு உரியவளாகவும் பெண்ணை ஆக்கி விடுகின்றது. பிள்ளைப் பாக்கியம் இல்லையே என்ற வேதனையால் தவிக்கின்ற அதேவேளை வீட்டினுள்ளும் வெளியிலும் மலடி என்ற வசைப் பேச்சுக்கு உள்ளாகி ஒரு பெண் படுகின்ற ஆற்றாமையினைப் பின்வரும் கவி காட்டுகின்றது.

'உருகும் மெழுகானேன் உள்ளம் மெழுகுக் கொம்பானேன்
கடுகு நிறமானேன் – மதினி இந்தக் கவலை வந்த நாள் தொடுத்து'

இந்த வேதனை ஏற்பட்ட காலம் முதலாக அவர் அடைந்துவந்த வேதனையின் தன்மையினையும், அதனால் உடலும் பொலிவு இழந்துவிட்ட நிலையினையும் உவமைகள் மூலம் எடுத்துக்காட்டுகின்றார். இவ்வாறு தனக்கு ஏற்பட்ட வேதனைகளை அதற்குக் காரணமானவரின் உறவினர்களிடம் எடுத்துக் கூறுவதன் மூலம் அப்பெண் மன அமைதிகாண முனைகின்றார்.

'மாமிக்கு மருமகள் எழுதிய கடிதம்' என்ற கவித் தொகுதியும் (பார்க்க: யோகராசா, செ.,2002:46) ஏமாற்றப்பட்ட ஓர் இளம்பெண்ணின் வேதனையை எடுத்துக் காட்டுவதாகும். இது சம்மாந்துறை என்ற ஊரைச் சேர்ந்த ஓர் இளம் பெண்ணால் எழுதப்பட்டது. திருமணம் தடைப்பட்டதால் ஓர் ஏழைப்பெண் அடைந்த வேதனையின் வெளிப்பாடுகளாக இந்தக் கவிகள் அமைந்துள்ளன. அவர் சில கவிகளில் தனக்கு இழைக்கப்பட்ட கொடுமையை இடித்துரைக்கின்றார். ஆயினும் குடும்ப உறவுக்கான முனைப்பே அந்தப் பெண்ணின் நோக்கமாக உள்ளது. அதாவது, தனது வேதனைகளையும், அவலமான நிலையினையும் எடுத்துக் கூறி, தன்மேல் இரக்கம் காட்டுமாறும், வாழ்வு தருமாறும் கெஞ்சுகின்ற தன்மையை

இக்கவிகளில் அதிகம் காணலாம். மாமியிடம் மனமாற்றத்தை ஏற்படுத்துவது இக்கவிகளின் நோக்காக உள்ளது.

'தேக்கமரம் பூத்து தெருவில் சொரிஞ்சது போல் – நாங்க
ஏங்கி அழுகிறத மாமி நீங்க என்னஎண்டு கேட்டிருங்க'

உவமை முலம் தன் வேதனையின் தன்மையைப் புலப்படுத்தும் அவர், அந்த வேதனையில் பங்கெடுக்குமாறும், தன்மீது இரக்கம் காட்டுமாறும் மாமியை வேண்டுகின்றார்.

'மய்யால் எழுதி மடிச்ச கடுதாசியில
கலத்தால் எழுதினாப் போல் எண்ட
கல்புலயும் மாமி கக்கிசம்கா'

என்று கவலையே வாழ்வாகிப் போன தன் அவல வாழ்வைக் கூறுகின்றார். இவ்வாறு தன் வேதனையின் அவலத்தைக் கூறுமிடத்து அதற்கு அப்பால் தன் குடும்பத்தின் அவலமான நிலையினையும் எடுத்துக்காட்டி தன்மீது இரக்கம் காட்டுமாறு வேண்டுதல் செய்கிறார். பல கவிகளினதும் ஈற்றில் தன்மீது இரக்கம் காட்டுமாறு கெஞ்சுகின்ற தன்மை தெரிகிறது.

'எண்ட தாயாரும் இல்ல தகப்பனுந்தான் மவுத்து
தனித்துக் கிடக்கன் எண்ட தங்கமாமி என்ன ஆதரிங்க'

என்று மேலும் தன் அனாதரவற்ற அவலநிலையினைக் கூறி கெஞ்சிக் கேட்கிறார். இவ்வாறு கெஞ்சி வேண்டுவதற்கு அடிப்படையாக அமைவது அப்பெண்ணின் பொருளாதார நிலையேயாகும் என்பதை அவரது கவிகள் புலப்படுத்துகின்றன. அந்தவகையில் ஏழைப் பெண்களின் திருமண நடைமுறையில் சமூகத்தில் உள்ள சீதன வழக்கு எத்தகைய தாக்கத்தைச் செலுத்துகின்றது என்பதை இவரது கவிகள் மூலம் அறிந்துகொள்ளலாம்.

'காணி முணு ஏக்கரும் கல்வீடும் உண்டுமெண்டா
கண்ணான மாமி என்னக் காதலிக்க ஆள் கிடய்க்கும்'

தன் திருமணத்திற்குச் சீதனம் தடையாக நிற்கும் சமூகநிலையை எடுத்துக்காட்டும் அவர், பொருளாதாரமே காதலைத் தீர்மானிக்கும் சக்தியாக உள்ளதையும் பாடுகிறார். சில கவிகளில் மாமியின் சதிச் செயலையும் வெளிப்படுத்துகிறார். ஆயினும் மாமியின் சதியை வெளிப்படையாக விமர்சனம் செய்யாது சதியை எண்ணி ஏங்குகின்ற தன்மை காணப்படுகின்றது. இதன் அடிப்படையிலேயே சில கவிகளில்; தீங்கு செய்த மாமியைச் சிறப்பித்தும் பாடுகின்றார்.

கிராமியப் பெண்கள் குடும்பப் பிரச்சினைகளாலோ, வேறு காரணங்களாலோ தம் பிள்ளைகளைப் பிரிந்திருக்க வேண்டி ஏற்பட்டபோது அடைந்த பிரிவு வேதனைகளையும் கவி;களாக உருவாக்கியுள்ளனர். அக்கரைப்பற்றைச் சேர்ந்த

ஒரு தாய் பாடிய 'கல்விக்காக தன்னைவிட்டுப் பிரிந்து சென்ற மகனை எண்ணிப் பாடியவை' என்ற தலைப்பில் அமைந்த கவித்தொகுதியில் 75 கவிகள் உள்ளன (பார்க்க: உதுமான் ஸாஹிப், எம். வை. 2006: 37–51). இக்கவிகளிலே பிள்ளையைப் பிரிந்த தாயின் பரிதவிப்பு பலவகையில் வெளிப்படுகின்றது.

கப்பலில் வெளிநாடு போன மகன் தன்னுடன் எவ்வித தொடர்பும் கொள்ளாத நிலையில் அவனுக்கு என்ன நடந்ததோ? எங்கு சென்றானோ? எப்படி இருக்கின்றானோ? என்ற தகவல் ஏதும் தெரியாத நிலையில் தாயின் பரிதவிப்பினை இக்கவிகள் வெளிப்படுத்துகின்றன. அந்த அச்சத்துடன் மகன் போன கப்பலைப் பத்திரமாகக் கொண்டு சேர்க்குமாறும், தன் கண்மணியைக் காவல் செய்யுமாறும் இறைவனை வேண்டுதல் செய்கின்றார்.

'ஆழிக்கடலில் அந்தரத்தில் போற கப்பல்
பங்கம் வராமல் பவுத்திரண்டா றகுமான்'

என்று அல்லாவை வேண்டுதல் செய்கின்றார். அவ்வாறே அவன் போய்ச் சேர்ந்த இடமும், கல்வி கற்கும் இடமும் எவ்விடமோ என்று தெரியாது தவிக்கின்றார். மகனைப் பல நாட்களாகப் பிரிந்திருந்தபோது அவனுக்கு என்ன நடந்தது என்று தெரியாத நிலையில் அவனது தோற்ற அழகையும் சிறப்பையும் எண்ணி எண்ணித் தவிக்கின்றார். 'ஏழை அடியாள் இருந்தழுத ஒப்பாரி' என்று தான் பாடுவதை ஒப்பாரி என்று கூறுகின்றார். அன்புக்குரியவர் பிரிகின்றபோது வேதனை மிகுதியில் அழும் வேளையில் அவரின் வடிவழகையும் சிறப்பையும் சொல்லிப் புலம்புவது பொதுவான துயர வெளிப்பாட்டு முறையாகும். இது ஒப்பாரியின் முதன்மைப் பண்புமாகும். மகனுக்கு என்ன நடந்ததென்று தெரியாது தவிக்கின்ற இத்தாயும் மகனின் வடிவழகை எண்ணி ஏங்குகின்றார்.

'போட்ட செருப்பும் பொன் பதிச்ச மோதிரமும்
மார்பில் விழும் சால்வையும் – மகனார்
மறந்திருக்கக் கூடு தில்லை'

என மகனின் அழகை எண்ணிப் புலம்புகின்றார். சில கவிகளில் மகன் தன்னை மறந்துவிட்டானோ என்று ஏங்குகிறார். சில கவிகளில் அவனுக்காக அநுபவித்த துன்பங்களைச் சொல்லிப் புலம்புகின்றார். இக்கவிகளில் கவலைகளை ஆற்ற முனைவதும் ஆற்ற முடியாமல் தவிப்பதுமான தாயின் பரிதவிப்பு நிலையைப் பரவலாகக் காணலாம்.

'ஆறண்டால் ஆறுதில்லை
அமரென்றால் அமருதில்லை
பொங்கும் கடலுக்கு
பொறுமதி என்ன சொல்லட்டும்'

பொங்கிவரும் கடலுக்குத் தன் மனத்துயரை உவமித்து ஆற்றாமையால் தவிப்புறுவதைப் பாடுகின்றார். அடுத்து வருகின்ற கவியொன்றில் மனத்தைத் தேற்றுதல் செய்ய முனைகின்றார்.

'கதறியழுது கைசேதப் பட்டாலும்

ஆதி எழுதினதை அழிக்கவும் முடியுமோ?

ஆண்டவன் தனக்கு விதித்த விதியாகக் கொண்டு ஆறுதல் காணுகின்ற அடுத்தகணமே அதற்கு முரண்நிலையாகப் பாடுகின்றார்.

'வந்த விதியை மனம் பொறுத்து நானிரிப்பேன்
பெற்ற இளம் வயிறு பெருங்கடலாய் பொங்குதல்லோ'

எவ்வளவுதான் ஆறுதல் கூறினும் பெற்ற மனம் கட்டுக்கடங்காமல் பேதலித்து நிற்கும் இயல்பான நிலையைப் புலப்படுத்துகின்றார். துயர மிகுதியில் தவிக்கின்றபோது தன் அவலமான நிலையை சமூகத்திலே உள்ளவர்கள் பொருட்படுத்தாமல் உள்ளதையிட்டும் மனக்குமுறலை வெளிப்படுத்துவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

'ஆண்கோழி கூவினால் ஆலமெல்லாம் கேட்கும்
பெண்கோழி கூவுறதை இவ்வுலகில் யாரறிவார்'

என்று குறியீடாக பெண் பற்றிய சமூகத்தின் தாழ்வுக் கருத்தியலை விமர்சிக்கின்றார். இது அப்பெண்ணின் மனக்குமுறலின் வெளிப்பாடாக அமைகின்றது. மகனை இழந்து தவிக்கின்றபோது மகனின் நிலையறிந்து சொல்வதற்கும், ஆறுதல் கூறுவதற்கும் தன் சமூகத்திலே எவரும் முனையாத நிலையில் அது ஒரு பெண்ணுக்கு ஏற்பட்ட அவலம் என்ற அடிப்படையிலேயே சமூகம் அக்கறை செலுத்தாமல் போனதை எண்ணி அவர் வேதனைப்படுகின்றார். இறுதியில் இக்கவிகளைப் பாடியமைக்கான நோக்கத்தைப் பின்வருமாறு பாடுகின்றார்.

'கற்றவளுமில்லை கவிவாணர் தானுமில்லை
பெற்ற கவலையினால் புலம்பினது தாய்மாரே'

எனவே இத்தொகுதியில் உள்ள கவிகள் குறிப்பிட்ட பெண்ணின் தாய்மை உணர்வுகளை பாவனை அற்றவகையில் வெளிப்படுத்துகின்றன.

அக்கரைப்பற்றைச் சேர்ந்த முஸ்லிம் வயோதிபத் தாய் ஒருவர் பாடிய 'மூத்த மகளுக்கு எழுதிய கவிகள்' (1991), 'இளைய மகளுக்கு எழுதிய கவிகள்' (1991), மற்றும் அவரது இளைய மகள் பாடிய 'ராத்தாவுக்கு எழுதிய கவிகள்' (1991) ஆகிய மூன்று கவித் தொகுதிகளும் தாய்க்கும் மகள்மாருக்கும் இடையில் ஏற்பட்ட பிரிவு, அதனால் ஏற்பட்ட ஏக்கம் என்பவற்றையும் ஆண் துணையற்ற ஏழைக் குடும்பமொன்றின் துன்பப்பட்ட பொருளாதார வாழ்வினையும் பேசுகின்றன.

குறித்த தாய் தம் வறுமை காரணமாக இளைய மகளை 1990களின் ஆரம்பத்தில் பணிப்பெண்ணாக சவுதி அரேபியாவுக்கு அனுப்பிவிட்டுத் திருமணமான தன் மூத்த மகளுடன் வாழ்ந்து வந்தபோது இருவருக்குமிடையே ஏற்பட்ட பிரச்சினை காரணமாகத் தாய் வீட்டைவிட்டு வெளியேற்றப்பட்டார். அந்நிலையில் தனிமைப்படுத்தப்பட்ட அத்தாய் தனக்கு ஏற்பட்ட துயரைக் கவிகளாகப் புனைந்து மூத்த மகளுக்கு அனுப்பினார் (மூத்த மகளுக்கு எழுதிய கவிகள்). அதேவேளை சவுதி அரேபியாவுக்கு உழைக்கச் சென்ற தனது இளைய மகளுக்கும் ஒரு கவித் தொகுதியை அனுப்பினார் (இளைய மகளுக்கு எழுதிய கவிகள்). தாயின்

கவிகளைப் படித்துக் கவலையுற்ற இளைய மகள் தன் வேதனைகளைத் தாய்க்குத் துயரை ஏற்படுத்திய அக்காவுக்குக் கவிகள் (ராத்தாவுக்கு எழுதிய கவிகள்) மூலம் (ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்து) தெரியப்படுத்தினார்.

தாயால் எழுதப்பட்ட முதல் இரு கவித் தொகுதிகளும் ஒரு தாய்க்கு மகள் தீராத வேதனையை ஏற்படுத்தும்போது அத்தாயின் மனம் அடைகின்ற பரிதவிப்பினை வெளிப்படுத்துகின்றன. பெற்று வளர்த்தெடுத்த தாய்க்கு இவ்வாறு செய்துவிட்டாயே! ஏன் இதைச் செய்தாய்! என்ற ஏக்கமும் ஏமாற்றமும் முதல்க் கவித் தொகுதியில் ஊடுபாவாக உள்ளன.

'பத்துமாதம் நான் சுமந்து – ஒன்ன பாராட்டிப் பெத்தெடுத்த
குத்தமிது என்று குமுறி அழுதேன் மகளே'.
'ஊட்டி வளத்து உன்னளவில் நான் உத்தேசித்து
பாடுபட்டேன் என்று இந்தப் பரிசு தந்தாய் என்ர சீனிமகள்'

என்றவாறு தாயுள்ளம் அடைகின்ற தவிப்பினை மகளிடம் சொல்லிப் புலம்புவனவாகப் பல கவிகள் அமைகின்றன. தாயானவள் பிள்ளைகளைப் பெற்று வளர்த்தெடுப்பதில் அநுபவித்த துயரங்களை நினைந்து புலம்பும்போது பெண்பிள்ளைகளைத் திருமணம் செய்து வைப்பதில் எதிர்நோக்கிய இன்னல்களைப் பற்றி அதிகம் பாடுகின்றார். இங்கு பெண் தலைமைத்துவக் குடும்பமொன்றில் பெண்ணானவள் தன் பெண் குழந்தைகளைச் சீதனம் சேர்த்துத் திருமணம் செய்து வைப்பதில் எதிர்கொள்ளும் இன்னல்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.

'பெத்து வளத்து பேருவெச்ச மக்களுக்கு – ஒரு
ஆண் துணயத் தேட வாப்பா அறிவுகெட்டுப் போயிருந்தார்'

என்று பெண் பிள்ளைகளைத் திருமணம் செய்து வைப்பதில் எவ்வித அக்கறையும் இல்லாத தன் கணவனின் பொறுப்பற்ற போக்கை எடுத்துக்காட்டுகின்றார். மற்றொரு கவியில் அவர்களுக்குச் சொத்துக்கள் சேர்ப்பதிலும் அவர் அக்கறை காட்டாததைப் பாடுகிறார். இந்நிலையில் பிள்ளைகளுக்குச் சொத்துச் சேர்ப்பதிலும், திருமணம் செய்து வைப்பதிலும் அவர் அநுபவித்த துன்பங்களை வெளிப்படுத்துகின்றார்.

'மக்களுக்காக நான் மனம் துணிஞ்சி தேர் ஏறி
காத்தில் பறந்தேன் மகளே கரைசேப்பம் என்று சொல்லி'.

'நம்முட மூணுபேர் மக்களுக்கும் முடிவு என்ன என்று சொல்லி – நான்
ஆணுக்கே உத்தரிச்சேன் – இந்த ஆலிலே மகளாரே'

சமூகத்திலே உள்ள சீதன நடைமுறையின் காரணமாக ஏழைக்குடும்பப் பெண்களை மணமுடித்து வைப்பதென்பது பாரிய சமூகப் பிரச்சினையாக உள்ளது. இந்தக் குடும்பச்சுமை பெண்களைச் சார்கின்றபோது இப்பிரச்சினை இன்னும் மோசமடைகின்றது. மூத்த மகளாலும், அவளது கணவனாலும் தான்

துயரப்படுத்தப்பட்டதைச் சொல்லிப் புலம்பி இறுதியிலே தனது மூன்று மகளுக்காகவும் அல்லாவிடம் அருள் வேண்டுகின்றார்.

'பெத்த வயிறு பேதலிச்சி நான் குமுற – என்ர
தங்க மகள் மூணயும் – நீ தளிராக்கித்தா றகுமான்'

இங்குத் தாய்மை உணர்வின் வெளிப்பாட்டைக் காணலாம். எவ்வளவுதான் துயர் செய்தபோதும் மூத்த மகளின் வாழ்வு சிறக்கவும் அவர் வேண்டுதல் செய்வது ஒரு தாயின் மனநிலையை எடுத்துக்காட்டுகின்றது.

அவர் பல கவிகளிலே தனது இறப்புப் பற்றிப் பாடுகின்றார். இது அவரது தவிப்பின் தாங்கொண்ணா நிலையைக் காட்டுகின்றது. ஒருவருக்கு மிகுந்த வேதனை ஏற்படும்போது தன்னை அழிக்க நினைப்பதும், அழித்துக்கொள்ளப்போவதாக மற்றவர்களிடம் சொல்லிப் புலம்புவதும், தன்னுயிரை எடுத்துக்கொள்ளுமாறு இறைவனிடம் வேண்டுவதும் மனித இயல்பாகும். இந்த உணர்வு வெளிப்பாடுகளை இக்கவிகளிலே காணலாம்.

'என்ர கண்டு மகளார்ர கண்ணில் முளியாமலுக்கு – நான்
மண்மறைந்து போக எனக்கி ஒரு மவுத்த உற்றுத்தா ஆண்டவனே'

வேதனையின் விளிம்பில் அவர் இறைவனிடம் இறப்பை வேண்டுகின்றார். சில கவிகளில் இறைவன் தன்னை இன்னும் எடுக்காமல் இருக்கிறானே என்று நொந்துகொள்கிறார். சிலபோது சாகத் துணிந்துவிட்டதாகப் புலம்புகிறார்.

தனது மரணம் பற்றிப் பாடும்போது தனது மரணக் கிரியைகளைச் செய்வதற்கு யாருமே இல்லையே என்று புலம்புவது அவரது பரிதவிப்பினை மேலும் அதிகப்படுத்துகின்றது. தனது மரணமும் இறுதிக் கிரியைகளும் தன் மூத்த மகளிடம் நடக்கவேண்டும் என்று ஆசைப்பட்டது நடக்கவில்லையே என்று ஏங்குகின்றார். அனாதரவாக்கப்பட்ட ஒரு வயோதிபத் தாயின் மனநிலையினை இக்கவிகள் வெளிப்படுத்துகின்றன.

இளைய மகளுக்கு அனுப்பிய கவிகள் ஒரு தாய்க்கு மகள் தீராத வேதனையை ஏற்படுத்தும்போது அத்தாயின் மனம் படுகின்ற அவத்தைகளை மட்டுமன்றி இளம் பெண்களை வறுமையின் நிமித்தம் வெளிநாடு அனுப்பிவிட்டு ஏங்கித் தவிக்கின்ற தாயுள்ளத்தையும் காட்டுகின்றன. இத்தகைய உணர்வு வெளிப்பாடுகள் பற்றி எழுத்து இலக்கியங்களிலே பேசப்படுவது அரிதாகும்.

'தாயாரும் ஏழை நம்மளத் தாவரிப்பார் இல்லயென்று – நீ
சவுதிக்கிப் போயி உழைக்க–ஒண்ட தலையெழுத்தோ என்ர சீனிமகள்'

தாய் மகளின் தலையெழுத்தை எண்ணி ஏங்குகின்றார். குடும்பத்தின் ஏழ்மை நிலையினால் தன் மகளுக்கு வெளிநாடு சென்று துயரப்படும் நிலை ஏற்பட்டுவிட்டதே என்று ஏங்குகின்றார்.

'ஒண்ட மண்டயில் எழுதி மயித்தால மூடிவெச்ச
எழுத்த அழிக்க நான் என்ன சைவன்கா மகளே'

தம் வறுமைப்பட்ட வாழ்வை எண்ணித் தவிக்கின்றார். மகளின் வாழ்வை நினைத்து தம் இன்னல்களை இறைவனிடம் சொல்லி அழுவது அவரது பல கவிகளினதும் பொருளாக அமைந்துள்ளது. சில கவிகளிலே அவளுக்காக அல்லாவிடம் மன்றாடுகின்றார். சில கவிகளிலே தம் இன்னல்களைச் சொல்லி அல்லாவிடம் மன்றாடுமாறு மகளிடம் வேண்டுகின்றார். அதேவேளை வெளிநாடு சென்று உழைக்கும் மகளின் துணிவை எண்ணி அமைதியும் அடைகின்றார்.

'மூணு குமர்களுக்கும் – ஒரு முடிவுமில்ல என்று சொல்லி – நீ
காலெடுத்து வெச்சாய் உனக்கு கருணை சைவான்; என்ர சீனிமகள்'

இங்குத் தம் குடும்ப இன்னல்களுக்கு விடிவு ஏற்படப்போவதை எண்ணி மகிழ்ச்சியும் அடைகிறார்.

இளைய மகளால் இயற்றப்பட்ட (ராத்தாவுக்கு எழுதிய கவிகள்) கவிகள் தாய்க்கு ஏற்பட்ட அவலம், உறவுகளைப் பிரிந்திருத்தல் என்பவற்றால் உண்டான ஏக்கங்களை மட்டுமன்றி மத்திய கிழக்கு நாட்டுக்குப் பணிப்பெண்ணாகச் சென்ற ஏழைப் பெண்ணின் அவலங்களையும் பேசுகின்றன. இது சமகால சமூக அவலமொன்றின் வகைமாதிரியான வெளிப்பாடாகும்.

1978 இல் இலங்கையில் திறந்த பொருளாதாரக் கொள்கை கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு அதிகமானோர் பணியாட்களாகச் சென்றனர். இந்நிலையில் குடும்பச் சுமையைப் ஏற்றுப் பல ஏழைப் பெண்கள் வெளிநாடு சென்றனர். இவர்களில் ஒருவராகவே குறித்த தாயின் இளைய மகளும் சவுதி அரேபியாவுக்குப் பணிப்பெண்ணாக அனுப்பப்பட்டார். இந்நிலையில் உறவுகளைப் பிரிந்திருந்தமை, அவ்வேளை அக்காவால் தாய்க்கு ஏற்படுத்தப்பட்ட துயரம் என்ற இரண்டினாலும் அவர் அடைந்த ஏக்க உணர்வுகளைக் கவிவடிவில் பாடி ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்து அனுப்பியிருந்தார். இக்காலக்கட்டத்தில் வெளிநாடு சென்றவர்கள் தமது துயரங்களை உறவுகளுடனும் உரையாடும் தன்மையில் பாடியோ, பேசியோ ஒலிநாடாவில் பதிவுசெய்து அனுப்புவது வழக்கமாக இருந்தது. இதனூடாக உறவினர் அருகில் இருக்கும் உளநிலையை அவர்கள் பெற்றுக்கொள்கின்றனர். குறித்த பெண் தனது ராத்தாவுடனும் மைத்துனருடனும் உரையாடுகின்ற அமைப்பில் உருக்கமுடன் அந்தக் கவிகளைப் பாடியுள்ளார். முக்கியமாக, குடும்பச் சுமையை ஏற்று வெளிநாடு வந்து துன்பப்படுகின்ற தனது நிலையை எண்ணி ஏங்குகின்ற தன்மையை இக்கவிகளில் அதிகம் காணலாம். இதனூடாக அக்காவிடம் மனமாற்றத்தை ஏற்படுத்த விழைகின்ற உளவியலொன்று ஊடாடி நிற்பதைக் காணலாம்.

'ஏழையாப் படைத்து இந்த இன்னல் எல்லாம் தாங்கவெச்சி – இந்த பூலோகத்தில் உட்ட ஒண்ட புதுமய நான் கேட்டமுறன்'

இறைவேண்டுதலை அடுத்து இடம்பெறுகின்ற முதலாவது கவியிலேயே தன்னை ஏழையாகப் படைத்து இவ்வாறு வெளிநாட்டில் துன்பங்களை அநுபவிக்கச் செய்த இறைவனின் செயலை எண்ணி வேதனை அடைகின்றார். அடுத்துவரும்

கவிகளிலும் தான் அடையும் துன்பங்களை இறைவன் தனக்கு விதித்த பங்காகக் கொண்டு ஏங்குகின்றார்.

'சின்னம் சிறு வயசு திசை தெரியா பருவம்
சவுதியில போய் உழைக்க நீ தந்த பங்கோ என் ஆண்டவனே'

என்று அனுபவங்கள் இல்லாத சிறுவயதிலேயே வெளிநாடு வந்து துன்பப்படுகின்ற நிலையை நீயே தந்தாய் என இறைவனை நொந்துகொள்வது அவரது உள்ளக் குமுறலை வெளிப்படுத்துகின்றது. இவ்வாறு தன் துன்பப்பட்ட நிலையை எண்ணி ஆண்டவனை நொந்து பாடும் அவர் குடும்பச் சுமையின் நிர்ப்பந்தம் காரணமாக வெளிநாடு வந்து துயரப்படுவதைப் பல கவிகளிலே தெரியப்படுத்துகின்றார்.

'பங்கப் புறக்கி பகுத்தெடுப்போம் என்று சொல்லி – நம்முட
ஊரை எழந்து ராத்தா – நான் உலகமெல்லாம் சுத்துறன்'.

'அண்ணன் தம்பி இல்ல நமக்கு ஆருதவி என்று சொல்லி – நம்முட
பங்கப் புறக்க – நான் பறந்து வந்தேன்கா ராத்தா'

குடும்பத்தின் ஒட்டுமொத்தச் சுமைகளும் அப்பெண் மேல் சுமத்தப்பட்டுள்ளமை இக்கவிகளில் தெரிகின்றது. முக்கியமாக சகோதரிகளைத் திருமணம் செய்து கொடுக்க வேண்டிய முதன்மைப் பொறுப்பு இப்பெண்கள் மீது சுமத்தப்பட்டுள்ளமை தெரிகின்றது. அதேவேளை ஏற்கனவே மணம் செய்து கொடுத்துள்ள தன் அக்காவுக்கும் அப்பெண்ணே உழைக்க வேண்டிய நிலையினையும் பாடுகின்றார்.

'காணிபூமி இல்ல வாப்பா – நம்மள
கரைசேக்க மாட்டார் என்று நான்
கால் எடுத்து வெச்சேன் மச்சான்
உங்கட கடமைகள சைவோமென்று'

கிழக்கிலங்கையின் பொருளாதார அமைப்பில் விவசாயக் காணிகளே பொருளாதாரத்தை ஈட்டும் முக்கிய மூலதனமாக அமைந்துள்ள நிலையில் நிலத்தை உடைமையாகக் கொண்டிராதவர்கள் தமது பெண்பிள்ளைகளைத் திருமணம் செய்து கொடுப்பதில் பல சிரமங்களை அனுபவித்தனர். இத்தகையதொரு நிலையில் தனது சகோதரிகளுக்குச் சீதனம் சேர்க்கவேண்டிய முதன்மைப் பொறுப்பை ஏற்றுக் குறித்த பெண் வெளிநாடு சென்று உழைப்பதை இக்கவி காட்டுகின்றது.

பாரம்பரியமான சமூக அமைப்பினுள் வாழ்ந்த பெண்களுக்கு வீட்டைவிட்டு வெளியே வேலை செய்யும் முதல் அனுபவத்தை இந்த வெளிநாட்டு வேலைவாய்ப்புத்தான் வழங்கியது. எத்தகைய வெளி அனுபவங்களையும் பெற்றிராத அந்த இளம்பெண் திடீரென வெளிநாட்டிற்குப் புறப்பட்டபோதும், அங்குச் சென்றபோதும் அடைந்த அச்சம், பிரிவு, ஏக்கம் ஆகியவற்றையெல்லாம் இந்தக் கவிகள் இயல்பாக வெளிப்படுத்தி நிற்கின்றன. வெளிநாடு போகுமுன்

விமான நிலையத்தில் அவர் அடைந்த தவிப்பைப் பின்வரும் கவி புலப்படுத்துகின்றது.

'ஏறினன் கப்பலில இருந்தன் அந்தப் பத்திரிப்பில்
பூட்டினன் வார – என்ர பொறி கலங்கிப் போச்சிதும்மா'

சுற்றம் சுகங்களையும் ஊரையும் விட்டுத் தன்னந்தனியாகப் பிரிந்து சென்றபோது ஏற்பட்ட உளத்தவிப்பை இயல்பாக வெளிப்படுத்துகின்றார். அவ்வாறே சவுதிக்குச் சென்று இறங்கிய போதும் அடைந்த அச்சத்தையும் ஏக்கத்தையும் பின்வருமாறு பாடுகின்றார்.

'பாச தெரியா படிப்பறிவும் நான் குறய
என்ன சைவோம் என்று ராத்தா – நான்
இருந்தழுதேன் அந்த யாபோட்டில்'

கிராமத்திலிருந்து சென்ற அந்தப் பெண் சவுதி நாட்டவரின் அரபு மொழி தெரியாத நிலையில் தனக்குக் கல்வியறிவும் குறைவு என்ற தாழ்வு உணர்வோடு என்ன செய்வது என்று புரியாது அடைந்த தவிப்பையும் அச்சத்தையும் வெளிப்படுத்துகின்றார்.

வெளிநாட்டிற்குப் பணிப்பெண்களாகச் செல்பவர்கள் எதிர்கொள்ளும் மற்றொரு தாக்கம் தனிமையைத் தாங்க முடியாமல் அடைகின்ற பிரிவு வேதனையாகும். மேற்படி பெண்ணின் கவிகளிலே பிரிவு வேதனை பரவலாக இடம்பெறுகின்றது.

'என்ர கட்டை சவுதியில – நான் காலம் கழத்துறன் – என்ர
உசிரு பறந்து மச்சான் ஒங்கிட ஊட்ட வந்து பாத்திரிக்கி'

சவுதியில் அவர் ஒரு ஜடமாகவே வாழ்வதையும், அவரது நினைவுகளெல்லாம் தன் வீட்டிலேயே இருப்பதையும் பாடுகின்றார். அடுத்த கவியில் 'ஆறுதலச் சொல்லி அதோ அனுப்பிவையுங்கோ' என்று தன் பிரிவு வேதனைக்கு ஆறதல் கூறுமாறு வேண்டுகின்றார்.

இவ்வாறு வெளிநாட்டுக்குப் பெண்கள் பணியாட்களாகச் செல்வதைப் பொருளாகக் கொண்டு பெண்களால் பாடப்பட்ட பல பாடல்கள் அவர்கள் வெளிநாடு சென்றமைக்கான குடும்பப் பின்னணிகளையும் அவர்கள் அனுபவித்த பல்வேறு வேதனைகளையும், ஏக்கங்களையும் இயல்பாக வெளிப்படுத்தி நிற்கின்றன.

இத்தகைய குடும்பப் பிரச்சினைகள் சார்ந்த இரங்கல் கவிகளைத் தவிர தம்முடன் நெருக்கமானவர்கள் மரணிக்கும்போது ஒப்பாரி நிலைப்பட்ட கவிகளைப் பாடுகின்ற மரபும் கிழக்கிலங்கை முஸ்லிம் பெண்கள் மத்தியில் இருந்து வந்திருக்கின்றது. இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் எம்.எச்.எம். அஸ்ரப் மரணமடைந்தபோது ரகுமத்தும்மா (மருதமுனை) முதலிய பெண்களால் பாடப்பட்ட பல ஒப்பாரிக் கவித் தொகுதிகள் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும். ஒப்பாரிப் பாடலொன்றில் இடம்பெறத்தக்க பல்வேறு பொருள், வடிவக்

கூறுகளையெல்லாம் உட்கொண்ட இக்கவிகள் அவற்றைப் பாடிய பெண்களின் இயல்பான புலம்பல்களாக அமைந்துள்ளன.

கவிகளும் சிக்கல் விடுவிப்பும்

கிழக்கிலங்கை முஸ்லிம் கிராமியப் பெண்கள் கவிகளின் ஊடாகத் தொடர்பாடல் கொள்கின்ற – உரையாடுகின்ற ஒரு மரபைக் கொண்டிருக்கின்றனர்; தாம் எதிர்கொள்ளும் வாழ்க்கைச் சிக்கல்களில் இருந்து விடுபடுவதற்கான ஒரு வழிமுறையாகவே கவிகளைப் புனைந்து பாடியிருக்கின்றனர். வேதனைகளைக் கவிகளாகப் புனைந்து தனிமையில் பாடுவதன் ஊடாக அல்லது அக்கவிகளை அந்த வேதனைக்குக் காரணமானவர்களுக்கு அனுப்புவதன் ஊடாகத் தமது மனதில் உள்ள துயரங்களை வெளியேற்றி மன ஆறுதல் பெற முனைகின்றனர். அதாவது இக்கவிகள் உணர்ச்சிகளின் வடிகால்களாகவும் சிக்கல்களைத் தீர்க்கின்ற ஊடகமாகவும் விளங்குகின்றன. மனச்சுமைகளை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளலும் அதனூடாக மன அமைதி காணலும் – முரண்பாட்டைத் தீர்த்தலும் இத்தொடர்பாடலின் நோக்கங்களாக இருந்துள்ளன.

சில கவி அளிக்கைகள் அளிக்கையைச் செய்யும் வேதனையுற்ற பெண்ணின் உள ஆறுதலை அடிப்படையாகக் கொண்டன. சில கவிகள் உள ஆறுதலோடு சிக்கல் விடுவிப்பையும் நோக்காகக் கொண்டன. கல்விக்காகத் தன்னை விட்டுப் பிரிந்து சென்ற மகனை எண்ணித் தாய் பாடிய கவிகள், தன்னைவிட்டுப் பிரிந்த கணவனை எண்ணிப் பாடிய கவிகள், ஒப்பாரிக் கவிகள் என்பன உள ஆறுதலையே உள்ளார்ந்த நோக்காகக் கொண்டன. ஆனால் 'மாமிக்கு மருமகள் எழுதிய கடிதம்', 'மூத்த மகளுக்கு எழுதிய கவிகள்', 'ராத்தாவுக்குப் பாடிய கவிகள்', 'இளைய மகளுக்குப் பாடிய கவிகள்' முதலான கவிகள் சிக்கல் விடுவிப்பையும் நோக்காகக் கொண்டவை.

நுணுக்கமாக நோக்கின் உளஅமைதி என்பதும் ஒரு சிக்கல் விடுவிப்பு நிலையே! வேதனைக்குக் காரணமானவர் – வேதனைக்குள்ளானவர் ஆகிய இருவரிடத்திலும் மனஅமைதியை ஏற்படுத்தி இயல்புநிலையினை ஏற்படுத்தும் ஊடகமாக இக்கவிகள் பயன்பட்டுள்ளன. மன அழுத்தங்களில் இருந்து விடுபடுதலானது சிக்கல் விடுவிப்பு நிலையை ஏற்படுத்துகின்றது. இது ஒரு 'உளத்தூய்மையாக்க'ச் செயற்பாடாகும். இதனை அரிஸ்ரோட்டில் 'கதார்சிஸ்' என்று கூறுவார். 'கதார்சிஸ்' மனஅமைதியினையும் சிக்கல் விடுவிப்பினையும் நிறைவேற்றுவதாகக் கூறுவர் (Esta Powell,n.d.).

கவித் தொடர்பாடல் மூலமான உள அமைதி – அதனூடான சிக்கல் விடுவிப்பு நிலையினை எய்துதல் என்பதற்கு 'மூத்த மகளுக்கு எழுதிய கவிகள்', 'இளைய மகளுக்குப் பாடிய கவிகள்', 'ராத்தாவுக்குப் பாடிய கவிகள்' என்ற மூன்று கவித் தொகுதிகளின் சுற்றுவட்ட அளிக்கைகள் எளிமையான எடுத்துக்காட்டுகளாகும். தாயாலும் இளைய மகளாலும் பாடப்பட்ட கவிகளை மூத்த மகளும் அவரது கணவரும் கேட்டு, படித்து மிகவும் மனம் நொந்ததாகக் கள அய்வின்மூலம் அறிய முடிந்தது. எனவே இந்தக் கவிகள் துன்பத்திற்குக் காரணமானவரிடத்திலும்

உணர்ச்சி வெளியேற்றத்தை ஏற்படுத்தி முரண்பாட்டுக்கான தீர்வையும் ஏற்படுத்தியுள்ளன எனலாம்.

துணைநின்றவை

- ❖ உதுமான் ஸாஹிப்,எம்.வை. (தொகு.), 2006, கிழக்கிலங்கை முஸ்லிம் கிராமியக் கவிகள், அக்கரைப்பற்று: முஹம்மது அப்ராஸ் வெளியீட்டகம்.
- ❖ நு.ஃமான்,எம்.ஏ., 1980, 'கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வாழ்க்கை முறைகளும் நாட்டார் வழக்குகளும் ஒரு பயன்நிலை ஆய்வு', சிவத்தம்பி,கா.,(பதி.), இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்கியல், யாழ்ப்பாணம்: தமிழ்த்துறை வெளியீடு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
- ❖ யோகராசா,செ., (தொகு.), 2002, ஈழத்து வாய்மொழிப் பாடல் மரபு, திரிகோணமலை: பண்பாட்டுத் திணைக்களம், கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சு.
- ❖ Esta, Powell, n.d., Catharsis in Psychology and Beyond: A Historic Overview, http://primal-page.com/cathar.htm.

கையெழுத்துப் பிரதிகள்

- ❖ முஸ்லிம் வயோதிபப் பெண்ணின் மகள், 1991, ராத்தாவுக்கு எழுதிய கவிகள்.
- ❖ முஸ்லிம் வயோதிபப் பெண், 1991, மூத்த மகளுக்குப் பாடிய கவிகள்
- ❖ ……………… .1991, இளைய மகளுக்குப் பாடிய கவிகள்.
- ❖ றஹ்மத்தும்மா,எம்.எச்.எம்., 2000, அஷ்ரப் ஒப்பாரி.